**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

*வெளியீடு :* 30-1-2012 Issued : 30-1-2012

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, டிசம்பர் 15, 2011 — தொகுதி 17**

**Thursday, the 15th December 2011 — Volume 17**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**15–12–2011**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| Governor and Council of Ministers | ix-xiii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. இரங்கற்குறிப்புகள்—** | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு | 1-3 |
| **2. இரங்கல் தீர்மானம்—** | |
| மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, அமைச்சர் அவர்கள் மறைவு | 3-4 |
| **3. அரசினர் தீர்மானங்கள்—** | |
| (அ) பேரவை விதி 33–ஐத் தளர்த்துதல் | 5 |
| (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் | 63 |
| **4. அரசினர் தனித் தீர்மானம்—** | 5-63 |
| முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை குறித்து | |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 5-13, 56-62 |
| திரு. ச. இராமச்சந்திரன் | 14-19 |
| * திரு. மு.க. ஸ்டாலின் | 19-23 |
| * திரு. க. பாலகிருஷ்ணன் | 23-27 |

பக்கங்கள்

**4. அரசினர் தனித் தீர்மானம்**—தொடர்ச்சி

முல்லைப் பெரியாறு அணை
பிரச்சினை குறித்து—தொடர்ச்சி

| | |
|---|---|
| * திரு. சு. குணசேகரன் | 28-32 |
| திரு. என்.ஆர். ரெங்கராஜன் | 32-33 |
| திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் | 33-34 |
| * முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா | 34-39 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 39-42 |
| திரு. ரா. சரத்குமார் | 43-46 |
| திரு. பி.வி. கதிரவன் | 47-49 |
| திரு. உ. தனியரசு | 49-51 |
| முனைவர் செ.கு. தமிழரசன் | 52-55 |

**5. பேரவைமுன் வைக்கப்பெற்று ஏடுகள்**— 64-67

## ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர் – முனைவர் கே. ரோசய்யா**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| **1. முதலமைச்சர்** | .. | **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** |
| | | *பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் மற்றும் உள் துறை* |
| **2. நிதி அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** |
| | | *நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள்* |
| **3. தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** |
| | | *தகவல் தொழில்நுட்பம்* |
| **4. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** | | **மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** |
| | | *மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு* |
| **5. நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** |
| | | *நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரக குடிநீர் வழங்கல்* |

**6. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

*வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்*

**7. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம்*

**8. வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

*வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம்*

**9. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:**

*தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்*

**10. பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

*பள்ளிக் கல்வி மற்றும் தொல்பொருளியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் இலஞ்ச ஒழிப்பு*



**11. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:**

*வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு*

**12. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:**

*கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்*

**13. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:**

*வனங்கள் மற்றும் சின்கோனா*

**14. நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:**

*நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்*

**15. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**

*உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு*

**16. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:**

*பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி*

**17. ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

*குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறுதொழில்கள் மற்றும் சத்துணவுத் திட்டம்*

**18. பொதுப் பணித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:**

*பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்*

**19. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:**

*தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள்*

**20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:**

*கால்நடை பராமரிப்பு*

**21. வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**

*வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு*

**22. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:**

*கைத்தறி மற்றும் துணிநூல்*

**23. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:**

*கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராம தானம்*



**24. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:**

*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*

**25. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:**

*சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு*

**26. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:**

*ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*

**27. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:**

*போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்*

**28. மீன் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:**

*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்*

**29. செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:**

*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம் மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் மற்றும் தேர்தல் அறிக்கை செயலாக்கம்*

**30. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு

**31. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**32. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், வக்ஃபு உள்ளிட்ட சிறுபான்மையினர் நலன்

**33. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – DR. K. ROSAIAH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister .. The Hon. Selvi J Jayalalithaa:**

Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home

**2. Minister for Finance .. The Hon. Thiru O. Panneerselvam:**

Finance, Planning, Legislative Assembly, Elections and Passports

**3. Minister for Information Technology .. The Hon. Thiru K.A. Sengottaiyan:**

Information Technology

**4. Minister for Electricity & Prohibition and Excise .. The Hon. Thiru Natham R. Viswanathan:**

Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses

**5. Minister for Municipal Administration & Rural Development .. The Hon. Thiru K.P. Munusamy:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**6. Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

**7. Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes, Welfare of the Differently abled and Social Reforms

**8. Minister for Commercial Taxes and Registration** .. **The Hon. Thiru Agri S.S. Krishnamoorthy:**

Commercial Taxes & Registration and Stamp Act

**9. Minister for Higher Education** .. **The Hon. Thiru P. Palaniappan:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology

**10. Minister for School Education, Sports & Youth Welfare, Law, Courts and Prisons** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

School Education and Archaeology, Sports and Youth Welfare, Tamil Official Language and Tamil Culture, Law, Courts, Prisons, Personnel and Administrative Reforms and Prevention of Corruption

**11. Minister for Agriculture** .. **The Hon. Thiru S. Damodaran:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development



**12. Minister for Co-operation** .. **The Hon. Thiru Sellur K. Raju:**

Co-operation, Statistics and Ex-Servicemen Welfare

**13. Minister for Forests** .. **The Hon. Thiru K.T. Patchaimal:**

Forests and Cinchona

**14. Minister for Highways & Minor Ports** .. **The Hon. Thiru Edappadi K. Palanisamy:**

Highways & Minor Ports

**15. Minister for Food** .. **The Hon. Thiru R. Kamaraj:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

**16. Minister for Milk and Dairy Development** .. **The Hon. Thiru V. Moorthy:**

Milk and Dairy Development

**17. Minister for Rural Industries and Nutritious Noon Meal** .. **The Hon. Thiru M.C. Sampath:**

Rural Industries including Cottage Industries and Small Industries and Nutritious Noon Meal

**18. Minister for Public Works** .. **The Hon. Thiru K.V. Ramalingam:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works

**19. Minister for Industries** .. **The Hon. Thiru S.P. Velumani:**

Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives

**20. Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru T.K.M. Chinnayya:**

Animal Husbandry

**21. Minister for Revenue ..** **The Hon. Thiru P. Thangamani:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies

**22. Minister for Handlooms and Textiles ..** **The Hon. Dr. S. Sundararaj:**

Handlooms & Textiles

**23. Minister for Khadi and Village Industries ..** **The Hon. Thiru P. Chendur Pandian:**

Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan

**24. Minister for Tourism ..** **The Hon. Tmt. S. Gokula Indira:**

Tourism, Tourism Development Corporation

**25. Minister for Environment ..** **The Hon. Thiru B.V. Ramanaa:**

Environment and Pollution Control

**26. Minister for Adi Dravidar & Tribal Welfare ..** **The Hon. Thiru N. Subramanian:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

**27. Minister for Transport ..** **The Hon. Thiru V. Senthil Balaji:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act

**28. Minister for Fisheries ..** **The Hon. Thiru K.A. Jayapal:**

Fisheries and Fisheries Development Corporation



**29. Minister for Information and Special Programmes Implementation ..** **The Hon. Thiru K.T. Rajendra Bhalaji:**

Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press and Implementation of Special Programmes and Implementation of the Election Manifesto

**30. Minister for Labour ..** **The Hon. Thiru S.T. Chellapandian:**

Labour, Population, Employment and Training, Newsprint Control, Census and Urban & Rural Employment

**31. Minister for Health ..** **The Hon. Dr. V.S. Vijay:**

Health, Medical Education and Family Welfare

**32. Minister for Backward Classes and Minorities Welfare ..** **The Hon. Thiru A. Mohammedjan:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees and Evacuees and Minorities Welfare including Wakf

**33. Minister for Hindu Religious and Charitable Endowments ..** **The Hon. Thiru M.S.M. Anandan:**

Hindu Religious and Charitable Endowments

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்*

## பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. ப. தனபால்*

## மாற்றுத் தலைவர்கள்#

*திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்*

*திரு. தங்க. தமிழ்ச்செல்வன்*

*திரு. செ. தாமோதரன்*

*திரு. எல். வெங்கடேசன்*

*திரு. ப. டில்லி பாபு*

*திரு. சு. குணசேகரன்*

## செயலாளர்

*திரு. அ.மு.பி. ஜமாலுதீன்*

---

# 7–6–2011 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | | |
|---|---|---|
| திருமதி சீ. நிர்மலா, பி.காம்., பி.ஜி.எல்., எம்.பி.ஏ. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., எம்.பி.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ம. பன்னீர் செல்வம், எம்.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ல. பத்மாவதி, பி.எஸ்சி., எஸ்.ஓ.ஜி.இ. | .. | குழு அலுவலர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. க. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ்.டபிள்யூ., பி.எட்., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |



| | | |
|---|---|---|
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. பூபதி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. சங்கர், பி.காம்., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி கோ.மு. வனஜா, எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திரு. வே. ரவிசங்கர், பி.எஸ்சி., எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. கி. சீனிவாசன், பி.எஸ்.சி., எம்.ஏ., பி.ஜி.எல்., சி.எல்.ஐ.எஸ். | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. ந. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. சக்திவேலு, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. அ. வீரராஜேந்திரன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ப. மனோகரன், எம்.ஏ., பி.எட்., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி க. செந்தாமரை, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மா. கோபாலகிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இரா. கோபிநாத், பி.காம். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இராம.சோ. கிரிதரன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சி. சகுந்தலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி அ. ராஜலெட்சுமி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திரு. இரா. விஜயகுமார், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ப. தேவபிரான், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| திரு. கு. தண்டபாணி, பி.காம். | .. | செயலாளரின் தனிச் செயலர் |
| திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்., | .. | தலைமை நிருபர் |
| திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்., | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. சுரேஷ் குமார், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | தலைமை நிருபர் |



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. | .. | கலசப்பாக்கம் |
| 2. | அசோக், திரு. எம்.கே. | .. | வேளச்சேரி |
| 3. | அண்ணாதுரை, திரு. இரா. | .. | மதுரை தெற்கு |
| 4. | அப்துல் ரஹீம், திரு. எஸ். | .. | ஆவடி |
| 5. | அரங்கநாதன், திரு. ஆ.க. | .. | கீழ்பெண்ணாத்தூர் |
| 6. | அருண் சுப்பிரமணியன், திரு. மு. | .. | திருத்தணி |
| 7. | அருண் பாண்டியன், திரு. செ. | .. | பேராவூரணி |
| 8. | அருள்செல்வன், திரு. ஆர். | .. | மயிலாடுதுறை |
| 9. | அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், திரு. | .. | சேலம் வடக்கு |
| 10. | அழகுவேலு, திருமதி க. | .. | கள்ளக்குறிச்சி (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. க. | .. | கும்பகோணம் |
| 13. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 14. | அன்பழகன், திரு. ஜெ. | .. | சேப்பாக்கம்— திருவல்லிக்கேணி |
| 15. | அஸ்லம் பாஷா, திரு. அ. | .. | ஆம்பூர் |
| 16. | ஆறுக்குட்டி, திரு. வி.சி. | .. | கவுண்டம்பாளையம் |
| 17. | ஆறுமுகம், திரு. எம். | .. | வால்பாறை (செ.வ.) |
| 18. | ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம்.. | .. | திருப்பூர் வடக்கு |
| 19. | இந்திராகாந்தி, திருமதி த. | .. | துறையூர் (செ.வ.) |

| | | |
|---|---|---|
| 20. இராமகிருஷ்ணன், திரு. நா. | .. | கம்பம் |
| 21. இராமச்சந்திரன், திரு. ச. | .. | ஆலந்துர் |
| 22. இராமச்சந்திரன், திரு. டி. | .. | தளி |
| 23. இராமலிங்கம், திரு. கே.வி. | .. | ஈரோடு மேற்கு |
| 24. இராஜி, திரு. வி.எஸ். | .. | செய்யூர் (செ.வ.) |
| 25. இராஜேந்திரன், திரு. இரா. | .. | குறிஞ்சிப்பாடி |
| 26. இராஜேந்திரன், திரு. பி.ஜி. | .. | ஆலங்குளம் |
| 27. உதயகுமார், திரு. ஆர்.பி. | .. | சாத்தூர் |
| 28. உலகநாதன், திரு. கே. | .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 29. எடப்பாடி கே. பழனிசாமி, திரு. | .. | எடப்பாடி |
| 30. கடம்பூர் ராஜு, திரு. | .. | கோவில்பட்டி |
| 31. கணிதா சம்பத், திருமதி எஸ். | .. | மதுராந்தகம் (செ.வ.) |
| 32. கணேசன், திரு. பா. | .. | உத்திரமேரூர் |
| 33. கணேஷ்குமார், திரு. அ. | .. | செஞ்சி |
| 34. கதிரவன், திரு. பி.வி. | .. | உசிலம்பட்டி |
| 35. கந்தன், திரு. கே.பி. | .. | சோழிங்கநல்லூர் |
| 36. கருணாநிதி, திரு. மு. | .. | திருவாரூர் |
| 37. கருப்பசாமி, திரு. ஏ.ஏ. | .. | அவினாசி (செ.வ.) |
| 38. கருப்பையா, திரு. பழ. | .. | துறைமுகம் |
| 39. கருப்பையா, திரு. மு.வீ. | .. | சோழவந்தான் (செ.வ.) |
| 40. கலை அரசு, திரு. ம. | .. | அணைக்கட்டு |
| 41. கலைராஜன், திரு. வி.பி. | .. | தியாகராய நகர் |
| 42. காமராஜ், திரு. இரா. | .. | நன்னிலம் |



| | | |
|---|---|---|
| 43. காமராஜ், திரு. என்.வி. | .. | வேதாரண்யம் |
| 44. காமராஜ், திரு. செ. | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 45. கிட்டுசாமி, திரு. ஆர்.என். | .. | மொடக்குறிச்சி |
| 46. கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 47. கிருஷ்ணமூர்த்தி, திரு. கொ.எ. | .. | பர்கூர் |
| 48. கிருஷ்ணன், திரு. கு.ப. | .. | ஆலங்குடி |
| 49. கிருஷ்ணன், திரு. சி. | .. | ஓமலூர் |
| 50. குணசீலன், திரு. வே. | .. | வந்தவாசி (செ.வ.) |
| 51. குணசேகரன், திரு. சு. | .. | சிவகங்கை |
| 52. குணசேகரன், திரு. ம. | .. | மானாமதுரை (செ.வ.) |
| 53. குப்பன், திரு. கே. | .. | திருவொற்றியூர் |
| 54. குமரகுரு, திரு. இரா. | .. | உளுந்தூர்பேட்டை |
| 55. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. | .. | ஜெயங்கொண்டம் |
| 56. கோகுல இந்திரா, திருமதி எஸ். | .. | அண்ணா நகர் |
| 57. கோபால்சாமி, திரு. க. | .. | ராஜபாளையம் |
| 58. கோபிநாத், திரு. கே. | .. | ஓசூர் |
| 59. சக்கரபாணி, திரு. அர. | .. | ஒட்டன்சத்திரம் |
| 60. சக்தி, திருமதி ம. | .. | சீர்காழி (செ.வ.) |
| 61. சண்முகநாதன், திரு. எஸ்.பி. | .. | ஸ்ரீவைகுண்டம் |
| 62. சண்முகம், திரு. சி.வி. | .. | விழுப்புரம் |
| 63. சண்முகவேலு, திரு. சி. | .. | மடத்துக்குளம் |
| 64. சந்திரகுமார், திரு. வி.சி. | .. | ஈரோடு கிழக்கு |

| | | |
|---|---|---|
| 65. சந்திரசேகர், திரு. ஆர். | .. | மணப்பாறை |
| 66. சம்பத், திரு. எம்.சி. | .. | கடலூர் |
| 67. சம்பத்குமார், திரு. கோவி. | .. | வாணியம்பாடி |
| 68. சம்பத்குமார், திரு. ப. | .. | திருச்செங்கோடு |
| 69. சரத்குமார், திரு. ரா. | .. | தென்காசி |
| 70. சவுந்தரராசன், திரு. அ. | .. | பெரம்பூர் |
| 71. சாந்தி, திருமதி ஆர். | .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 72. சாமி, திரு. ஆர். | .. | மேலூர் |
| 73. சிவக்கொழுந்து, திரு. ப. | .. | பண்ருட்டி |
| 74. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். | .. | குன்னம் |
| 75. சிவசுப்பிரமணியன், திரு. எம்.பி.எஸ். | .. | நெய்வேலி |
| 76. சிவபதி, திரு. என்.ஆர். | .. | முசிறி |
| 77. சின்னசாமி, திரு. ஆர். | .. | சிங்காநல்லூர் |
| 78. சின்னராஜ், திரு. ஓ.கே. | .. | மேட்டுப்பாளையம் |
| 79. சின்னையா, திரு. டி.கே.எம். | .. | தாம்பரம் |
| 80. சீனிவாசன், திரு. ஆர். | .. | ஆற்காடு |
| 81. சுந்தரம், திரு. பி.எல். | .. | பவானிசாகர் (செ.வ.) |
| 82. சுந்தரராஜ், டாக்டர் ச. | .. | பரமக்குடி (செ.வ.) |
| 83. சுந்தர்ராஜன், திரு. ஆர். | .. | மதுரை மத்தி |
| 84. சுபா, திருமதி ர. | .. | கெங்கவல்லி (செ.வ.) |
| 85. சுப்பிரமணியன், திரு. ந. | .. | செய்யாறு |
| 86. சுப்பையா, திரு. இ. | .. | அம்பாசமுத்திரம் |
| 87. சுப்ரமணியன், திரு. ந. | .. | கந்தர்வகோட்டை (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 88. சுரேஷ்குமார், திரு. டி | .. | செங்கம் (செ.வ.) |
| 89. செங்குட்டுவன், திரு. டி. | .. | வேப்பனஹள்ளி |
| 90. செங்கோட்டையன், திரு. கே.ஏ. | .. | கோபிசெட்டிப்பாளையம் |
| 91. செந்தமிழன், திரு. ஞா. | .. | சைதாப்பேட்டை |
| 92. செந்தில்குமார், திரு. எஸ். | .. | திருவெறும்பூர் |
| 93. செந்தில் பாலாஜி, திரு. வி. | .. | கரூர் |
| 94. செந்தூர் பாண்டியன், திரு. பூ. | .. | கடையநல்லூர் |
| 95. செல்லப்பாண்டியன், திரு. சி.த. | .. | தூத்துக்குடி |
| 96. செல்லூர் கா. ராஜு, திரு. | .. | மதுரை மேற்கு |
| 97. செல்வம், திரு. எஸ்.கே. | .. | வீரபாண்டி |
| 98. செல்வராஜு, திரு. எம்.கே. | .. | சேலம் தெற்கு |
| 99. செல்வி ராமஜெயம், திருமதி | .. | புவனகிரி |
| 100. செழியன், முனைவர் கோவி. | .. | திருவிடைமருதூர் (செ.வ.) |
| 101. சேகர், திரு. சி.எச். | .. | கும்மிடிப்பூண்டி |
| 102. சோமசுந்தரம், திரு. வி. | .. | காஞ்சிபுரம் |
| 103. சோழன் சித. பழனிச்சாமி, திரு. | .. | காரைக்குடி |
| 104. சௌந்தரபாண்டியன், திரு. அ. | .. | லால்குடி |
| 105. டில்லி பாபு, திரு. ப. | .. | அரூர் (செ.வ.) |
| 106. தங்கமணி, திரு. பி. | .. | குமாரபாளையம் |
| 107. தங்கம் தென்னரசு, திரு. | .. | திருச்சுழி |
| 108. தங்கவேலன், திரு. சுப. | .. | திருவாடனை |
| 109. தங்கவேல், திரு. கே. | .. | திருப்பூர் தெற்கு |
| 110. தமிழரசன், திரு. கா. | .. | மதுரை கிழக்கு |

| | | | |
|---|---|---|---|
| 111. | தமிழரசன், முனைவர் செ.கு. | .. | கீழ்வைத்தினான்குப்பம் (செ.வ.) |
| 112. | தமிழழகன், திரு. க. | .. | திட்டக்குடி (செ.வ.) |
| 113. | தமிழ்ச்செல்வன், திரு. இரா. | .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 114. | தமிழ்ச்செல்வன், திரு. தங்க. | .. | ஆண்டிப்பட்டி |
| 115. | தனபால், திரு. ப. | .. | ராசிபுரம் (செ.வ.) |
| 116. | தனியரசு, திரு. உ. | .. | பரமத்தி வேலூர் |
| 117. | தன்சிங், திரு. ப. | .. | பல்லாவரம் |
| 118. | தாமோதரன், திரு. செ. | .. | கிணத்துக்கடவு |
| 119. | திராவிடமணி, திரு. மு. | .. | கூடலூர் (செ.வ.) |
| 120. | தினகரன், திரு. க. | .. | சூலூர் |
| 121. | துரைக்கண்ணு, திரு. இரா. | .. | பாபநாசம் |
| 122. | துரைசாமி என்கிற சேலஞ்சர் துரை, திரு. ரா. | .. | கோயம்புத்தூர் தெற்கு |
| 123. | துரைமுருகன், திரு. | .. | காட்பாடி |
| 124. | துரையப்பா, டாக்டர் ச. | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 125. | நஞ்சப்பன், திரு. ந. | .. | பெண்ணாகரம் |
| 126. | நடராஜ், திரு. என்.எஸ்.என். | .. | காங்கேயம் |
| 127. | நத்தம் ஆர். விசுவநாதன், திரு. | .. | நத்தம் |
| 128. | நயினார் நாகேந்திரன், திரு. | .. | திருநெல்வேலி |
| 129. | நல்லதம்பி, திரு. கு. | .. | எழும்பூர் (செ.வ.) |
| 130. | நாகராஜன், திரு. கே.பி. | .. | மயிலம் |
| 131. | நாகைமாலி, திரு. வீ.பி. | .. | கீழ்வேளூர் (செ.வ.) |
| 132. | நாஞ்சில் முருகேசன், திரு. அ. | .. | நாகர்கோவில் |
| 133. | நாராயணன், திரு. ஆ. | .. | நாங்குநேரி |



| | | | |
|---|---|---|---|
| 134. | நாராயணன், திரு. பி.ஜி. | .. | பவானி |
| 135. | நீலகண்டன், திரு. வ. | .. | திரு.வி.க. நகர் (செ.வ.) |
| 136. | பச்சைமால், திரு. கே.டி. | .. | கன்னியாகுமரி |
| 137. | பரஞ்ஜோதி, திரு. மு. | .. | திருச்சிராப்பள்ளி மேற்கு |
| 138. | பரமசிவம், திரு. கே.பி. | .. | பல்லடம் |
| 139. | பவுன்ராஜ், திரு. சு. | .. | பூம்புகார் |
| 140. | பழனிசாமி, திரு. கே.சி. | .. | அரவக்குறிச்சி |
| 141. | பழனிச்சாமி, திரு. ச. | .. | வேடசந்தூர் |
| 142. | பழனியப்பன், திரு. பி. | .. | பாப்பிரெட்டிப்பட்டி |
| 143. | பன்னீர்செல்வம், திரு. ஓ. | .. | போடிநாயக்கனூர் |
| 144. | பாண்டியராஜன், திரு. க. | .. | விருதுநகர் |
| 145. | பாபு முருகவேல், திரு. ர.ம. | .. | ஆரணி |
| 146. | பாப்பா சுந்தரம், திரு. அ. | .. | குளித்தலை |
| 147. | பார்த்தசாரதி, திரு. ப. | .. | விருகம்பாக்கம் |
| 148. | பார்த்திபன், திரு. எஸ்.ஆர். | .. | மேட்டூர் |
| 149. | பாலகிருஷ்ணன், திரு. க. | .. | சிதம்பரம் |
| 150. | பாலபாரதி, செல்வி கே. | .. | திண்டுக்கல் |
| 151. | பாஸ்கர், திரு. அ. | .. | தருமபுரி |
| 152. | பாஸ்கர், திரு. கே.பி.பி. | .. | நாமக்கல் |
| 153. | பிரபாகர், திரு. ஜே.சி.டி. | .. | வில்லிவாக்கம் |
| 154. | பிரின்ஸ், திரு. ஜே.ஜி. | .. | குளச்சல் |
| 155. | பீம்ராவ், திரு. க. | .. | மதுரவாயல் |
| 156. | புத்திசந்திரன், திரு. | .. | உதகமண்டலம் |
| 157. | புஷ்ப லீலா ஆல்பன், டாக்டர் (திருமதி) | .. | பத்மநாபபுரம் |

| | | |
|---|---|---|
| 158. பூனாட்சி, திரு. தோ.பெ. | .. | மணச்சநல்லூர் |
| 159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். | .. | திருப்பத்தூர் |
| 160. பெரியசாமி, திரு. இ. | .. | ஆத்தூர் |
| 161. பெருமாள், திரு. இரா. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 162. பெருமாள், திரு. செ. | .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 163. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. | .. | உடுமலைப்பேட்டை |
| 164. பொன்னுசாமி, திரு. கே. | .. | தாராபுரம் (செ.வ.) |
| 165. பொன்னுப்பாண்டி, திரு. வெ. | .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 166. போஸ், திரு. ஏ.கே. | .. | மதுரை வடக்கு |
| 167. மணிமாறன், திரு. இரா. | .. | பூந்தமல்லி (செ.வ.) |
| 168. மணிவேல், திரு. துரை. | .. | அரியலூர் |
| 169. மலரவன், திரு. தா. | .. | கோயம்புத்தூர் வடக்கு |
| 170. மனோகரன், திரு. ஆர். | .. | திருச்சிராப்பள்ளி கிழக்கு |
| 171. மனோகரன், திரு. க. | .. | திருப்போரூர் |
| 172. மனோகர், திரு. பி.ஆர். | .. | சோளிங்கர் |
| 173.மனோரஞ்சிதம், திருமதி | .. | ஊத்தங்கரை (செ.வ.) |
| 174. மாதேஸ்வரன், திரு. சு. | .. | ஆத்தூர் (செ.வ.) |
| 175. மார்க்கண்டேயன், திரு. கு.வ. | .. | விளாத்திகுளம் |
| 176. முத்துகருப்பண்ணசாமி, திரு. எம்.கே. | .. | பொள்ளாச்சி |
| 177. முத்துக்குமரன், திரு. எஸ்.பி. | .. | புதுக்கோட்டை |
| 178. முத்துக்குமார், திரு. வி. | .. | விருத்தாசலம் |
| 179. முத்துராமலிங்கம், திரு. ம. | .. | திருமங்கலம் |



| | | |
|---|---|---|
| 180. முருகன், திரு. மு. | .. | முதுகுளத்தூர் |
| 181. முருகுமாறன், திரு. என். | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 182. முருகேசன், திரு. து. | .. | செங்கல்பட்டு |
| 183. முனுசாமி, திரு. கே.பி. | .. | கிருஷ்ணகிரி |
| 184. முஹம்மத்ஜான், திரு. அ. | .. | இராணிப்பேட்டை |
| 185. மூர்த்தி, திரு. வி. | .. | மாதவரம் |
| 186. மைக்கேல் ராயப்பன், திரு. சி. | .. | ராதாபுரம் |
| 187. மைதீன்கான், திரு. டி.பி.எம். | .. | பாளையங்கோட்டை |
| 188. மோகன், திரு. ப. | .. | சங்கராபுரம் |
| 189. ரமணா, திரு. பி.வி. | .. | திருவள்ளூர் |
| 190. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். | .. | அந்தியூர் |
| 191. ரமேஷ், திரு. கா.கோ. | .. | திருப்பத்தூர் |
| 192. ரவி, திரு. சு. | .. | அரக்கோணம் (செ.வ.) |
| 193. ராமசாமி, திரு. ஆ. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 194. ராமச்சந்திரன், திரு. கா. | .. | குன்னூர் |
| 195. ராமமூர்த்தி, திரு. ஆர். | .. | விக்கிரவாண்டி |
| 196. ராஜநாயகம், திரு. மு. | .. | அறந்தாங்கி |
| 197. ராஜலட்சுமி, திருமதி ஆர். | .. | மயிலாப்பூர் |
| 198. ராஜா, திரு. ஏ.கே.டி. | .. | திருப்பரங்குன்றம் |
| 199. ராஜா, திரு. டி.ஆர்.பி. | .. | மன்னார்குடி |
| 200. ராஜா, திரு. பொன். | .. | பொன்னேரி (செ.வ.) |
| 201. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. | .. | சிவகாசி |
| 202. ரெங்கசாமி, திரு. எம். | .. | தஞ்சாவூர் |

| | | |
|---|---|---|
| 203. ரெங்கராஜன், திரு. என்.ஆர். | .. | பட்டுக்கோட்டை |
| 204. ரெத்தினசாமி, திரு. மு. | .. | திருவையாறு |
| 205. லாசர், திரு. ஏ. | .. | பெரியகுளம் (செ.வ.) |
| 206. லிங்கமுத்து, திரு. கு. | .. | குடியாத்தம் (செ.வ.) |
| 207. வளர்மதி, திருமதி பா. | .. | ஆயிரம் விளக்கு |
| 208. விஜயகாந்த், திரு. | .. | ரிஷிவந்தியம் |
| 209. விஜயதரணி, திருமதி எஸ். | .. | விளவங்கோடு |
| 210. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | விராலிமலை |
| 211. விஜயலட்சுமி பழனிசாமி, திருமதி ப. | .. | சங்கரி |
| 212. விஜய், டாக்டர் வி.எஸ். | .. | வேலூர் |
| 213. வீரமணி, திரு. கே.சி. | .. | ஜோலார்பேட்டை |
| 214. வெங்கடாச்சலம், திரு. என்.டி. | .. | பெருந்துறை |
| 215. வெங்கடாஜலம், திரு. கோ. | .. | சேலம் மேற்கு |
| 216. வெங்கடேசன், திரு. எல். | .. | திருக்கோவிலூர் |
| 217. வெற்றிவேல், திரு. பு. | .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 218. வேணுகோபாலு, திரு. கே.எஸ்.என். | .. | பழனி |
| 219. வேதாச்சலம், திரு. எஸ். | .. | அம்பத்தூர் |
| 220. வேலு, திரு. எ.வ. | .. | திருவண்ணாமலை |
| 221. வேலுமணி, திரு. எஸ்.பி. | .. | தொண்டாமுத்தூர் |
| 222. வைகைச்செல்வன், டாக்டர் | .. | அருப்புக்கோட்டை |
| 223. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |
| 224. வைரமுத்து, திரு. பி.கே. | .. | திருமயம் |



| | | |
|---|---|---|
| 225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். | .. | இராமநாதபுரம் |
| 226. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | .. | கிள்ளியூர் |
| 227. ஜானகிராமன், திரு. ஐ. | .. | வானூர் (செ.வ.) |
| 228. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 229. ஜெயசுதா, திருமதி எல். | .. | போளூர் |
| 230. ஜெயபால், திரு. கே.ஏ. | .. | நாகப்பட்டினம் |
| 231. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஸ்ரீரங்கம் |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | .. | கொளத்தூர் |
| 233. ஹரிதாஸ், டாக்டர் த. | .. | திண்டிவனம் (செ.வ.) |
| 234. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் | .. | நியமனம் |
| 235. (வெற்றிடம்) | .. | சங்கரன்கோவில் (செ.வ.) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஏ. நவநீதகிருஷ்ணன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2042—கார்த்திகை 29

## 2011 டிசம்பர் 15, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 11–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்நிற் பவை."

இயற்கையான அறிவுக் கூர்மையும், உயர்வான நூலறிவும், கூர்மையும் ஒருசேரப் பெற்றவர்களுக்கு தீர்த்து வைக்க முடியாத மிக நுட்பமான சூழ்ச்சிகள் என்று எதுவும் இல்லை.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

### 1. இரங்கற்குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான டாக்டர் ஏ. மணி அவர்கள் 23–7–2011 அன்றும், திரு. ஏ.ஆர். மாரிமுத்து அவர்கள் 4–10–2011 அன்றும், திருமதி எஸ். ஹேமலதா தேவி அவர்கள் 21–10–2011 அன்றும், திரு. க. சுப்பு அவர்கள் 29–10–2011 அன்றும், திரு. என். சிவஞானம் அவர்கள் 30–10–2011 அன்றும், திரு. மு.க. பெரியசாமி அவர்கள் 17–11–2011 அன்றும், திரு. கி. இராஜன்பாபு (என்கிற) தணிகை பாபு அவர்கள் 21–11–2011 அன்றும், திரு. வி.பி. சிங்காரவேலு அவர்கள் 7–12–2011 அன்றும் மற்றும் திரு. கொ. இராமசாமி அவர்கள் 8–12–2011 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2011 டிசம்பர் 15

*டாக்டர் ஏ. மணி அவர்கள் 1996 முதல் 2001 வரை உளுந்தூர்பேட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றினார்.*

*திரு. ஏ.ஆர். மாரிமுத்து அவர்கள் 1957 முதல் 1962 வரை அதிராம்பட்டினம் தொகுதியிலிருந்தும், 1967 முதல் 1971 வரையிலும், 1971 முதல் 1976 வரையிலும் மற்றும் 1977 முதல் 1980 வரையிலும் பட்டுக்கோட்டை தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்பட பணியாற்றினார்.*

*திருமதி எஸ். ஹேமலதா தேவி அவர்கள் 1957 முதல் 1962 வரை பெண்ணாகரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்.*

*திரு. க. சுப்பு அவர்கள் 1971 முதல் 1976 வரை இராஜபாளையம் தொகுதியிலிருந்தும், 1977 முதல் 1980 வரை வில்லிவாக்கம் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்.*

*திரு. என். சிவஞானம் அவர்கள் 1980 முதல் 1984 வரையிலும் மற்றும் 1985 முதல் 1988 வரையிலும் திருவோணம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்.*

*திரு. மு.க. பெரியசாமி அவர்கள் 2006 முதல் 2011 வரை பூம்புகார் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றினார்.*

*திரு. கி. இராஜன்பாபு (என்கிற) தணிகை பாபு அவர்கள் 1991 முதல் 1996 வரை திருத்தணி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்.*

*திரு. வி.பி. சிங்காரவேலு அவர்கள் 1996 முதல் 2001 வரை வால்பாறை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்.*



2011 டிசம்பர் 15] [பேரவைத் தலைவர்]

*திரு. கொ. இராமசாமி அவர்கள் 1977 முதல் 1980 வரை சிவகாசி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பான முறையில் பணியாற்றினார்.*

*இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. இரங்கல் தீர்மானம்

### மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, அமைச்சர் அவர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, அமைச்சர் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்.*

*“திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயில் சட்டமன்றத் தொகுதியிலிருந்து 1996 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற மக்கள் பணியாற்றியவரும், அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவினையும், பாராட்டினையும், நன்மதிப்பையும் பெற்றவரும், ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராக சீரிய முறையில் பணியாற்றியவரும், ஆதி திராவிடர் நலத் துறை, கால்நடைத் துறை, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை ஆகியவற்றின் அமைச்சராகத் திறம்பட பணியாற்றியவரும், தான் சார்ந்த அரசியல் இயக்கத்தில் சாதாரணத் தொண்டனாக இணைந்து பல்வேறு பொறுப்புகளைத் திறம்பட வகித்தவரும், தான் சார்ந்த அரசியல் கட்சியின் மீதும், கட்சித் தலைமையின் மீதும் அன்பும், ஆழ்ந்த நம்பிக்கையும், அளப்பரிய விசுவாசமும், மாறாப் பற்றும் கொண்டவரும்,*

[பேரவைத் தலைவர்] [2011 டிசம்பர் 15

*தன்னுடைய மேடைப் பேச்சுக்களில் புரட்சித் தலைவரின் பாடல்களைப் பாடி மக்களைக் கவர்ந்தவரும், இனிமையையும், பண்பையும், எளிமையையும் தன்னகத்தே கொண்டவரும், அனைவரிடத்திலும், நட்புணர்வோடும், அன்போடும் பழகியவருமான திரு. சொ. கருப்பசாமி அவர்கள் 22–10–2011 அன்று தனது 56–வது அகவையில் திடீரென்று இயற்கை எய்தியது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

*அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."*

*முற்பகல் 11–05*

*இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும்முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)*

*மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும்வகையில் இப்பேரவை நிகழ்ச்சிகள் 15 நிமிடங்கள் ஒத்திவைக்கப்படுகின்றன. பேரவை மீண்டும் 11–20–க்குக் கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*பின்னர், பேரவை முற்பகல் 11–05 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.*

*முற்பகல் 11–20 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*



2011 டிசம்பர் 15]

## 3. அரசினர் தீர்மானங்கள்

### (அ) பேரவை விதி 33–ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தீர்மானம். பேரவை விதி 33–ஐத் தளர்த்துதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 33–ஐத் தளர்த்தி, இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 4. அரசினர் தனித் தீர்மானம்

### முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தனித் தீர்மானம். முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை குறித்த தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை தொடர்பாக, கேரள அரசு அம்மாநில மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவரும் சூழ்நிலையில், கேரள அரசின் உண்மையற்ற பிரச்சாரத்தின் அடிப்படையில், தமிழக உரிமைகளை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்பதை நாம் அனைவரும் ஒன்றுபட்டு தெரிவிக்கும்வகையில் இன்று இந்தச் சட்டமன்றச் சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 டிசம்பர் 15

தமிழ்நாட்டில் உள்ள தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்ட மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் முல்லைப் பெரியாறு அணை முற்றிலும் பாதுகாப்பான அணை என்பதை முதற்கண் தெரிவித்துக் கொண்டு அது குறித்த சில விவரங்களை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

முல்லைப் பெரியாறு அணை புவி ஈர்ப்பு விசையின் அடிப்படையில், 1886–லிருந்து 1895 வரையிலான ஆண்டுகளில் சுண்ணாம்பு சுர்க்கி கலவையால் கருங்கல்லில் கட்டப்பட்டதாகும். பொதுவாகவே, புவி ஈர்ப்பு விசையின் அடிப்படையில் கட்டப்படும் அணைகள் நீர் அழுத்தம்; அலைகளால் ஏற்படும் அழுத்தம்; நில அதிர்வுகளினால் ஏற்படும் விசை போன்றவற்றைத் தனது பளுவினால் தாங்கிக் கொள்ளும் சக்தி வாய்ந்தவை. எனவேதான், புவி ஈர்ப்பு அடிப்படையில் கட்டப்பட்ட முல்லைப் பெரியாறு அணை இன்றளவும் உறுதியாகவும், வலிமை மிக்கதாகவும் விளங்குகிறது.

“பெரியாறு திட்டத்தின்’’கீழ், சென்னை மாகாணத்திற்குத் தண்ணீரைத் திருப்பும்வகையில் திருவாங்கூர் மகாராஜாவுக்கும், சென்னை மாகாணத்திற்கும் இடையே 1–1–1886 முதல் 999 ஆண்டுகளுக்கான பெரியாறு குத்தகை உடன்படிக்கை, 29–10–1886 அன்று ஏற்பட்டது. ஒரு ஏக்கர் நிலத்திற்கு, 5 ரூபாய் ஆண்டு வாடகை என்ற அடிப்படையில், சுமார் 8,000 ஏக்கர் நிலம் குத்தகைக்கு விடப்பட்டது. இந்த அணையின் நீர் மூலம், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள சுமார் 2.23 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில், 29–5–1970 அன்று கேரளாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் இடையே இரண்டு துணை ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. அதாவது,

30 ஆண்டுகளுக்கு ஒரு முறை இக்குத்தகை வாடகை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், ஒரு ஏக்கருக்கான, ஆண்டுக் குத்தகை வாடகையை 5 ரூபாயிலிருந்து 30 ரூபாயாக உயர்த்துதல் மற்றும் மீன்பிடி உரிமையை கேரளாவிற்கு விட்டுக் கொடுத்தல் ஆகியவை அடங்கிய ஓர் ஒப்பந்தமும்;



2011 டிசம்பர் 15] [செல்வி ஜெ ஜெயலலிதா]

மின் உற்பத்தித் திறனுக்கு ஏற்ப கட்டணம் செலுத்துவதன் அடிப்படையில், புனல் மின்சாரத்தை உற்பத்தி செய்துகொள்ள தமிழ்நாட்டை அனுமதிப்பது என்கிற மற்றொரு ஒப்பந்தமும் ஏற்பட்டன.

இந்த இரண்டு ஒப்பந்தங்களும், 1886 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அசல் உடன்படிக்கையின் உரிமையாளர் என்ற முறையில் ஏற்படுத்தப்பட்டன.

இதுபோன்ற அணைகள் வலுப்படுத்தப்பட்டதற்கு பல்வேறு எடுத்துக்காட்டுகள் உலக அளவில் உள்ளன. 1911 ஆம் ஆண்டு, அமெரிக்காவில் உள்ள அரிசோனா மாநிலத்தில் கட்டப்பட்ட ரூஸ்வெல்ட் அணை வலுப்படுத்தப்பட்டு, அதனுடைய கொள்ளளவு அதிகரிக்கப்பட்டது. 1905 ஆம் ஆண்டு, பிரான்ஸ் நாட்டில் கட்டப்பட்ட ஜோக்ஸ் அணை வலுப்படுத்தப்பட்டு 1952 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டது. இதேபோன்று, இங்கிலாந்து நாட்டிலுள்ள ‘மேல் கிளன்டோவல்’ என்ற புவி ஈர்ப்பு விசை கொண்ட அணையும் வலுப்படுத்தப்பட்டது.

முற்பகல் 11–25

இதேபோன்று, முல்லைப் பெரியாறு அணையிலும், மத்திய நீர் ஆணையத் தலைவரின் பரிந்துரைகளின் அடிப்படையில், 1980 முதல் 1994 வரை வலுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பழைய அணையில், அணையின் முன் மற்றும் பின் பக்கப் பகுதிகள் சுண்ணாம்பு சுர்க்கி கலவையால் கருங்கற்கள், அதாவது, stone masonry with lime surkhi mortar கொண்டு கட்டப்பட்டுள்ளன. இதுமட்டுமல்லாமல், அணையின் மையப் பகுதி சுண்ணாம்பு சுர்க்கி திண்காரையால், அதாவது, lime surkhi concrete–ஆல் கட்டப்பட்டது. இவ்வாறு கட்டப்பட்ட முல்லைப் பெரியாறு அணை, குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால அடிப்படையில் எவ்வாறு வலுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை விளக்கிக் கூறுவது எனது கடமை என்றே கருதுகிறேன்.

குறுகிய காலத் திட்டமாக, அணையின் எடையை அதிகரிக்கும் பொருட்டு, 21 அடி அகலத்திற்கு மூன்று அடி பருமன் கொண்ட ஆர்.சி.சி. கட்டுமானப் பணி அணையின் முழு நீளத்திற்கு அதன் மேல் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. இதன்காரணமாக, அணையின் எடை ஒரு மீட்டருக்கு 35 டன் அதிகரித்துள்ளது. அதாவது, அதன் கட்டமைப்புடன் மொத்தம் 12 ஆயிரம் டன் எடை கூடுதலாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 டிசம்பர் 15

நடுத்தர கால நடவடிக்கையாக, இறுக்கு விசைத் தொழில்நுட்பத்தின் அடிப்படையில், அணையின் அடித்தளத்துடன் எஃகு கம்பிகள் இழுத்துக் கட்டப்பட்டுள்ளன. அணையின் முன் பகுதியிலிருந்து 5 அடி தொலைவில், அணையின் மேற்பரப்பிலிருந்து, அடித்தளப் பாறையில் 30 அடி வரை, 9 அடி இடைவெளியில், 4 அங்குலம் குறுக்களவில் துளைகள் அணையின் முழு நீளத்திற்கும் போடப்பட்டுள்ளன. இந்தத் துளைகளுக்குள் 7 மில்லி மீட்டர் பருமன் கொண்ட மிக வலுவான 34 எஃகு கம்பிகள் பொருத்தப்பட்டுள்ளன. அஸ்திவாரத்தில் உள்ள கருங்கல் பாறைகளுடன், இந்தக் கம்பிகள் உறுதியாகப் பொருத்தப்பட்டுள்ளன. முதலில் 20 அடி ஆழத்திற்குத் திண்காரைக் கட்டுகள், அதாவது, concrete போடப்பட்ட பிறகு கம்பிகள் செலுத்தப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளன. 120 டன் சக்தி கொண்ட இக்கம்பிகள், மேற்பரப்பிலிருந்து இழுத்துக் கட்டப்பட்டுள்ளன. இந்த நிலையில், துளையை அடைக்கும் வகையில் சிமிட்டிக் கலவை போடப்பட்டு மேற்பரப்பு மூடப்பட்டது. இதன்காரணமாக, அஸ்திவாரப் பாறைகளுடன் 120 டன் விசை கொண்டு அணையை வலுவாக இறுக்குக் கம்பிகள் பிடித்துக் கொள்ளும். நில அதிர்வு உட்பட பல்வேறு விசைகளைத் தாங்கிக் கொள்ளும் வகையில், அணையின் முழு நீளத்திற்கும், 9 அடி இடைவெளியில் 95 கம்பிகள் செலுத்தப்பட்டு சிமிட்டிக் கலவை போடப்பட்டிருக்கிறது.

நீண்டகால நடவடிக்கையாக அணையின் பின்புறத்தில் 10 அடி ஆழம், 32 அடி அகலத்திற்குத் தரை மட்டத்திலிருந்து 145 அடி உயரத்திற்கு ஆர்.சி.சி. கட்டுமானம் அணையின் தலைப் பகுதியுடன் இணையும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, தற்போதுள்ள அணை மற்றும் புதிய கட்டுமானம் ஆகியவை ஒரே அணை போல் செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. மத்திய நீர் ஆணையத்தின் பரிந்துரைகளின்படி, கட்டுமானத்தை வலுப்படுத்தும் அதேசமயத்தில், புதிய கட்டுமானத்தில் 10 அடி மற்றும் 45 அடி உயரத்திற்கு இரண்டு வடிகால் மாடங்கள், அதாவது Drainage Galleries அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம், அணையிலிருந்து கசியும் நீர் அன்றாடம் கணக்கிடப்படுகிறது.

அணை பாதுகாப்பாக, வலுவாக, ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால், ஓரளவு நீர் கசிவு அணையிலிருந்து வெளியேறுவது அவசியம் என்பது விஞ்ஞானரீதியாக



2011 டிசம்பர் 15] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நிரூபிக்கப்பட்டு, நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விழைகிறேன். மேலும், அணையின் நீர்மட்டம் அதன் முழு கொள்ளளவான 152 அடிக்கும் மேலாக உயர்கையில், அணையைப் பாதுகாக்கும் பொருட்டு, உபரிநீர் ஏற்கெனவே உள்ள 36 x 16 அடி கொண்ட 10 மதகுகள் வழியாக வெளியேற்றப்படும். இதன்மூலம், ஒரு வினாடிக்கு 86 ஆயிரம் கன அடி நீரை வெளியேற்ற முடியும். இதுமட்டுமல்லாமல், மத்திய நீர் ஆணையத்தின் ஆலோசனையின் பேரில், கூடுதலாக வினாடிக்கு 36 ஆயிரம் கன அடி நீரை வெளியேற்றும் திறன் கொண்ட 40x16 அடி அளவுள்ள மூன்று மதகுகள் கட்டப்பட்டுள்ளன. எனவே, தற்போது அணையிலிருந்து தோராயமாக வினாடிக்கு 1,22,000 கன அடி உபரி நீரை வெளியேற்ற முடியும். இதிலிருந்து அணை மிகவும் பாதுகாப்பாக உள்ளது என்பதும், பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு எடுத்துள்ளது என்பதும் தெள்ளத் தெளிவாகிறது.

முற்பகல் 11–30

இந்தச் சூழ்நிலையில், முல்லைப் பெரியாறு தொடர்பாக, ஏற்கெனவே நிலுவையில் இருந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் தமிழ்நாடு மற்றும் கேரள மாநில அரசுகள் எடுத்துரைத்த வாதங்களின் அடிப்படையிலும்; வல்லுநர்கள் அளித்த அறிக்கையின் அடிப்படையிலும்; முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை தற்போதுள்ள 136 அடியிலிருந்து 142 அடி வரை உயர்த்திக்கொள்ளலாம் என்றும்; அணையை வலுப்படுத்துவதற்கான எஞ்சிய பணிகளை தமிழ்நாடு மேற்கொள்ளலாம் என்றும்; மத்திய நீர் ஆணையம் திருப்தியடையும் வகையில், அணை பலப்படுத்தப்படுவதற்கான எஞ்சிய பணிகள் முடிவடைந்த பிறகு, அணையின் நீர்மட்டத்தை 152 அடி அளவுக்கு உயர்த்தப்பட அனுமதிப்பதற்கு முன்னர், தனிப்பட்ட வல்லுநர்கள் அணையின் பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்வார்கள் என்றும்; உச்ச நீதிமன்றம் 27–2–2006 அன்று தீர்ப்பளித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆணையில், அணை பாதுகாப்பாக உள்ளது குறித்து உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளவற்றை இங்கு எடுத்துக் கூறுவது பொருத்தமாக அமையும் எனக் கருதுகிறேன்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 டிசம்பர் 15

"Regarding the issue as to the safety of the dam on water level being raised to 142 ft. from the present level of 136 ft., the various reports have examined the safety angle in depth including the view point of earthquake resistance. The apprehensions have been found to be baseless."

அதாவது, "தற்போதுள்ள 136 அடியிலிருந்து 142 அடி வரை அணையின் நீர்மட்டத்தை உயர்த்தும்போது, அணையின் பாதுகாப்பைப் பொறுத்தவரையில், நிலநடுக்கத்தினை எதிர்க்கும் சக்தி உட்பட அனைத்துப் பாதுகாப்புக் கோணங்களையும் பல்வேறு அறிக்கைகள் ஆழமாக ஆராய்ந்துள்ளன. இதன்படி, முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்ற கவலை, ஐயப்பாடு ஆகிய அனைத்தும் ஆதாரமற்றவை" என்று உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்து இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

உச்ச நீதிமன்றம் மேலும் தனது தீர்ப்பில், "The experts having reported about the safety of the dam and the Kerala Government having adopted an obstructionist approach, cannot now be permitted to take shelter under the plea that these are disputed questions of fact. There is no report to suggest that the safety of the dam would be jeopardized if the water level is raised for the present to 142 ft."

அதாவது, "அணை பாதுகாப்பாக உள்ளது என்று வல்லுநர்கள் தெரிவித்துள்ள நிலையில், இவைகள் எல்லாம் சர்ச்சைக்குரிய விஷயங்கள் என்ற சாக்கு போக்கை வைத்து, அதற்குத் தடை ஏற்படுத்தும் விதமான அணுகுமுறையை கேரள அரசு கடைபிடிப்பது அனுமதிக்க முடியாது. அணையின் நீர்மட்டத்தை 142 அடிக்கு உயர்த்தினால், அணையின் பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கும் என்று எந்த அறிக்கையும் சுட்டிக்காட்டவில்லை" என்று உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் இந்த ஆணையை முடக்கும் வகையில், "கேரள பாசன மற்றும் நீர் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம், 2006", கேரள சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு; இந்தத் திருத்தச் சட்டம் 18–3–2006 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி, முல்லைப் பெரியாறு அணையின் முழு நீர்மட்டம் 136 அடியாக நிர்ணயிக்கப்பட்டது. இந்தத் திருத்தச் சட்டம், அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்று கூறி, தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த சிவில் வழக்கு இன்னமும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.



2011 டிசம்பர் 15] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இவ்வழக்கில், கேரள அரசின் 2006 ஆம் ஆண்டைய சட்டத் திருத்தம் செல்லத்தக்கதா என்பது உட்பட சட்ட மற்றும் அரசமைப்பு ரீதியான அம்சங்களைத் தவிர, ஏனைய நிலைகளைப் பரிசீலிக்கும்பொருட்டு உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதியரசர் டாக்டர் ஏ.எஸ். ஆனந்த் தலைமையில், அதிகாரம் படைத்த குழு, அதாவது Empowered Committee ஒன்றை உச்ச நீதிமன்றம் 18–2–2010 அன்று நியமித்தது. தமிழ்நாடும், கேரளாவும் தங்கள் மாநிலங்களின் சார்பாக இரண்டு உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர்களை நியமித்தன.

தற்போது, இந்த அதிகாரம் படைத்த குழு, முல்லைப் பெரியாறு அணைப் பகுதி மற்றும் பரிசோதனைக் கூடங்களில் பல்வேறு ஆய்வு மற்றும் சோதனைகளை மேற்கொள்வதற்காக மத்திய நீர் ஆணையம் (Central Water Commission); மத்திய நீர் மற்றும் மின்சார ஆராய்ச்சி நிலையம் (Central Water and Power Research Station); இந்திய புவியியல் அளவைத் துறை (Geological Survey of India); பாபா அணு ஆராய்ச்சி மையம் (Bhabha Atomic Research Centre) மற்றும் மத்திய மண் மற்றும் கட்டுமானப் பொருள்கள் ஆராய்ச்சி நிலையம் (Central Soil and Material Research Station) போன்ற அமைப்புகளின் சேவைகளைப் பயன்படுத்திக்கொண்டு வருகிறது. இந்தக் குழு, தனது அறிக்கையை 2012 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் உச்ச நீதிமன்றத்தின்முன் அளிக்க இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், அரசியல் ஆதாயத்திற்காக, முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்ற புரளியை கிளப்பி, கேரள மக்களை பீதியடைச் செய்யும் வகையில், விஷமப் பிரச்சாரத்தை, கேரள அரசு மேற்கொண்டு வருவது மிகவும் வருந்தத்தக்கது.

முற்பகல் 11–35

முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்று *உண்மைக்கு மாறான பிரச்சாரம் செய்யும் கேரள அரசைக் கண்டிக்கும் வகையிலும்; தமிழ்நாடு தனக்குள்ள உரிமையை விட்டுக் கொடுக்காது என்பதை நிலை நிறுத்தும் வகையிலும், (மேசையைத் தட்டும் ஒலி) பின்வரும் தீர்மானத்தினை இன்று இப்பேரவையில் நான் முன்மொழிய விழைகிறேன்.

**தீர்மானம்**

"தமிழ்நாடு மற்றும் கேரள மாநில அரசுகளின் வாதங்களையும், வல்லுநர்களின் அறிக்கைகளையும் ஆராய்ந்து, அதன் அடிப்படையில், முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பானது

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க திருத்தப்பெற்றது.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 டிசம்பர் 15

*என்பதால், அதன் நீர்மட்டத்தை, 136 அடியிலிருந்து, 142 அடியாகவும்; எஞ்சிய பலப்படுத்தும் நடவடிக்கைகள் முடிக்கப்பட்ட பின், 152 அடியாகவும் உயர்த்திக்கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றம் 27–2–2006 அன்று தீர்ப்பளித்த பிறகு, அந்த ஆணையை, இந்த நாட்டின் அரசமைப்புச் சட்டத்தை முற்றிலும் அவமதிக்கும் வகையில், "கேரள பாசன மற்றும் நீர் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம், 2006" என்ற சட்டத்தை இயற்றி, அந்தச் சட்டத்திற்கு எதிரான மனு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும்போது, முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்ற *உண்மைக்கு மாறான பிரச்சாரம்மூலம் கேரள மக்களிடையே பீதியை கிளப்பிவிட்டு, புதிய அணை கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையை கேரள அரசு வலியுறுத்தும் அதே நேரத்தில்; முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 120 அடியாகக் குறைக்க வேண்டும் என்று 9–12–2011 அன்று கேரள சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் இயற்றியுள்ள கேரள அரசு வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியது. எனினும், அரசமைப்புச் சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்ட கேரள சட்டமன்றத்தைக் கண்டிப்பது சரியான அணுகுமுறையாக இருக்காது என்பதால், அந்தத் தீர்மானத்தின்மீது தமிழக மக்களின் வருத்தத்தினைத் தெரிவிப்பது என்றும்;*

*முல்லைப் பெரியாறு அணை தொடர்பாக, கேரள அரசு *உண்மைக்கு மாறான பிரச்சாரத்தை மேற்கொண்டு இருப்பதையொட்டி, தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் பதற்றமான சூழ்நிலை நிலவுவதால், முல்லைப் பெரியாறு அணையைப் பாதுகாக்கும் பொருட்டு, மத்திய தொழிற் பாதுகாப்புப் படையை, அதாவது,* Central Industrial Secuirty Force*–ஐ அந்தப் பகுதிக்கு உடனடியாக மத்திய அரசு அனுப்ப வேண்டும் என்றும்;*

*உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை ஏற்று, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதற்கு ஏதுவாக, 2006 ஆம் ஆண்டு கேரள பாசன மற்றும் நீர் பாதுகாப்பு (திருத்தச்) சட்டத்தில் உரிய திருத்தங்களை கேரள அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும்;*

*அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த, எஞ்சியுள்ள நீண்டகால அணைப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள, கேரள அரசு தமிழகத்திற்குத் தடை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் என்றும்;*

---

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க திருத்தப்பெற்றது.*



2011 டிசம்பர் 15] [செல்வி ஜெ ஜெயலலிதா]

*எந்தச் சூழ்நிலையிலும், தமிழ்நாடு தனக்குள்ள உரிமையை விட்டுக்கொடுக்காது என்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தீர்மானிக்கிறது." (மேசையைத் தட்டும் ஒலி)*

இந்தத் தீர்மானத்தின்மீது, அனைத்துக் கட்சிகளின் சார்பிலும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்ட பின்னர், மேலும் எனது கருத்துக்களை நான் எடுத்துரைக்கிறேன் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க, தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டக்கூடிய ஒரு தீர்மானத்தை இங்கே மொழிந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தின் இன்றியமையாமையையும் அவசர, அவசியத்தையும் உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள் என்று கருதுகிறேன்.

இந்தப் பிரச்சினையில், இந்தப் பேரவையிலே இருக்கிற அனைத்துக் கட்சி உறுப்பினர்களும், ஒட்டுமொத்தத் தமிழகமும் ஓர் அணியில் நிற்கிறது என்பதை உணர்த்த வேண்டிய ஒரு முக்கிய தருணத்தில் உள்ளோம் என்பதை அனைவரும் அறிவீர்கள்.

தீர்மானத்தினுடைய வாசகங்கள்கூட மிகக் கவனமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் கோர்க்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நீங்கள் அறிவீர்கள். தீர்மானத்தின்மீது முன்வரிசைத் தலைவர்கள் பேச இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தையொட்டி, அந்த உணர்வோடு ஒன்றி, நம்முடைய உரிமைக்கு வலு சேர்க்கின்ற வகையில், விவாதத்தில் கலந்துகொள்கின்ற உறுப்பினர்கள், தங்கள் விவாதத்தை அமைத்துக்கொண்டு உரையாற்றக் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் முன்மொழிந்துள்ள இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் பேரவையில் ஒருமனதாக, அனைத்துக் கட்சியினரின் ஒருமித்த கருத்தாக, தமிழக மக்களின் நலனுக்காக, அரசியல் நிதானத்தோடு தமிழக மக்களின் உரிமையைப் பாதுகாக்கின்ற வகையில், நமது உரிமைக்கு வலு சேர்க்கின்ற வகையில் பொறுப்புணர்வோடு உறுப்பினர்கள் தங்கள் விவாதத்தை அமைத்துக்கொண்டு உரையாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2011 டிசம்பர் 15

நேரத்தின் அருமை கருதி உரையாற்றும் உறுப்பினர்கள் சுருக்கமாக தங்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். முதலில் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

*முற்பகல் 11–40*

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைகள் உறங்குகிறபோது பொய்கள் ஊர்வலம் வரும் என்பார்கள். ஆனால், உண்மை விழித்தெழுகிறபோது பொய்கள் போகிற இடம் தெரியாது. இன்று இந்தச் சிறப்புக் கூட்டத்தின்மூலம் உண்மைகள் விழித்தெழுகின்றன என்று பார்க்கின்றபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பிலே முழு மனதுடன் வரவேற்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாறு போன்ற மக்கள் பிரச்சினை சம்பந்தமானவற்றில் அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு தேசிய முற்போக்கு திராவிட கழகம் முழு ஒத்துழைப்பு தரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முல்லைப் பெரியாறு அணையில் எந்த அளவுக்கு நீர்த்தேக்கம் செய்ய வேண்டும் என்பது இன்று நேற்றல்ல; 1979 ஆம் ஆண்டிலிருந்தே பிரச்சினையாக இருந்து வருகிறது. அந்த அணை பலம் வாய்ந்தது அல்ல; ஆகவே, அந்த அணையை மாற்றி புதிய அணையைக் கட்ட வேண்டுமென்று கேரள அரசு குரல் எழுப்பியது. 1978 ஆம் ஆண்டிலேயே அந்தப் பிரச்சினையை எழுப்பினார்கள். அந்த அணையைப் பலப்படுத்துவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று கேரள அரசு தெரிவித்ததையொட்டி Central Water Commission–மத்திய நீர் ஆணையத்தினுடைய வழிகாட்டுதலின்படி அந்த அணை தமிழக அரசால் பலப்படுத்தப்பட்டது. பலப்படுத்தி முடித்த பிறகு 152 அடியிலிருந்து 136 அடியாக அதை ரிப்பேர் செய்கிற பணியை நாம் மேற்கொண்டோம். மீண்டும் பலப்படுத்தி முடித்த பிறகு நீர் மட்டத்தை உயர்த்த வேண்டுமென்று சொன்னபோது கேரள அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை; அவர்கள்தான் சொன்னார்கள், அணையை பலப்படுத்த வேண்டுமென்று. தமிழக அரசு தன் சொந்த செலவிலே அந்த அணையை பலப்படுத்தியது; மத்திய நீர் ஆணையமும் அதற்கு தொழில்நுட்ப ரீதியாக உதவி



2011 டிசம்பர் 15] [திரு. ச. இராமச்சந்திரன்]

அளித்தது. செய்யச் சொல்லிவிட்டு திரும்பவும் அதை ஏற்றுக்கொள்ளாமல் வேறு பல காரணங்களை, சாக்கு போக்கு காட்டி மறுபடியும் அந்த அணையின் நீர் மட்டத்தை உயர்த்தக் கூடாது என்று சொன்னால் அதற்கு என்ன பொருள்?

ஒரு வீட்டில் வாடகைக்கு வருகின்றவர்கூட, வீட்டுக்காரரிடம் சில ரிப்பேர்களை செய்யச் சொல்லி, அதற்குப் பிறகு நான் வருகிறேன் என்று சொல்வாரேயானால், அந்த ரிப்பேரை வீட்டுக்காரர் செய்கிறார். அதற்குப் பிறகு வாடகைக்கு வர நினைப்பவர் வர மாட்டேன் என்று சொன்னால் அந்த வீட்டுக்காரர் சும்மா விடுவாரா? ஆனால், நாம் பொறுமையாகத்தான் இருந்தோம்.

*முற்பகல் 11–45*

பின்னர், உச்ச நீதிமன்றத்திற்கு இந்த வழக்கை எடுத்துச் சென்றபோது உச்ச நீதிமன்றத்தின் சார்பில், 2001 ஆம் ஆண்டு நிபுணர் குழுவை அமைத்து, அணையின் பலத்தை பரிசீலித்தார்கள். நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த பொறியாளர்கள்கூட அல்ல, விட்டல் என்பவர் தலைமையில் மத்திய சர்க்காரைச் சேர்ந்த பொறியாளர்கள், உத்திரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், வட புலத்தைச் சேர்ந்தவர்கள், அவர்கள் எல்லாம் ஆராய்ந்து இந்த அணை பலமாகத்தான் இருக்கிறது, இந்த அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தலாம், மேலும் சில மேம்பாட்டுப் பணிகளைச் செய்த பிறகு 152 அடியாக உயர்த்தலாம் என்று அவர்களே தங்களுடைய அறிக்கையைக் கொடுத்தார்கள். மத்திய அரசும் அதை ஏற்றுக்கொண்டு உச்ச நீதிமன்றத்திற்கு அந்த அறிக்கையைத் தந்தது. அணை பலமாகத்தான் இருக்கிறது என்று மத்திய அரசும் சொன்னது. அதையெல்லாம் ஏற்றுக்கொண்டுதான் உச்ச நீதிமன்றம் 2006 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இந்த நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தலாம் என்றும், சில பணிகளை மேற்கொண்ட பிறகு, மத்திய நீர் ஆணையம் அதைப் பார்த்து விட்டு அது சரியாக இருக்கிறது என்று தெரிந்தால் மீண்டும் சம்பந்தப்பட்ட நிபுணர்களை வைத்து ஆராய்ந்து அறிக்கை பெற்று, அதை 152 அடியாக உயர்த்தலாம் என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்தது. மத்திய அரசு ஏற்றும் கொண்டது. உச்ச நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டது. நிபுணர்களும் ஏற்றுக் கொண்டார்கள். நாமும் அதை வரவேற்றோம். அப்படியிருந்தும்

2006 ஆம் ஆண்டிலே இருந்து இன்றுவரை அதைச் செயல்படுத்த முடியவில்லை. காரணம் கேரள மாநிலம் என்ன செய்கிறதென்றால் அவர்கள் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். எங்கள் மாநிலத்திலே உள்ள அணைகளின் பாதுகாப்பை நாங்கள்தான் பராமரிப்போம், அப்படியென்றால் என்ன பொருள்? அந்த நாட்டிலே உள்ள அணைகளின் பாதுகாப்பைப் பற்றியோ அங்குள்ள மக்களின் பாதுகாப்பைப் பற்றியோ கேரளாவிற்கு மட்டும்தான் அக்கறை. உச்ச நீதிமன்றத்திற்கு அக்கறை இல்லை. தமிழ்நாட்டிற்கு அக்கறை இல்லை. மத்திய சர்க்காருக்கு அக்கறை இல்லை. இந்தப் போக்கு எதைக் காட்டுகிறது? ஏன் இதை நான் குறிப்பிடுகிறேன் என்றால் இன்றைக்குக்கூட உச்ச நீதிமன்றம் இதை விசாரித்துக் கொண்டிருக்கிறது. உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பைத் தருகிறது என்றால் அந்தத் தீர்ப்பை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? இன்று பேசப்படுகிறது, நீங்கள் பிரச்சினை ஆக்காதீர்கள். இரண்டு பேரும் அமைதியாக இருங்கள். பிரதமர் அழைப்பார், தமிழ்நாட்டின் முதலமைச்சரும், கேரள முதலமைச்சரும் பேசுங்கள் என்று. 2006 ஆம் ஆண்டிற்குப் பிறகு இதே நிலைமை நீடித்தபொழுது திரும்பத் திரும்ப அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கடிதம் எழுதுகிறார். கேரளாவிற்கு கடிதம் எழுதுகிறார். மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சருக்கு எழுதுகிறார். பிரதமருக்கு எழுதுகிறார். அன்றும் ஆலோசனை வழங்கப்பட்டது, வாருங்கள் பேசுவோம் என்று. 2007 ஆம் ஆண்டிலே பேசினார்கள். கேரள முதலமைச்சரையும் தமிழ்நாட்டு முதலமைச்சரையும் அழைத்துப் பேசினார்கள். என்ன ஆயிற்று? ஒன்றும் ஆகவில்லை. அதற்குப் பிறகு அந்தச் சட்டம் செல்லுமா, செல்லாதா என்று இன்று உச்ச நீதிமன்றத்திலே அரசியல் சட்ட அமர்வின் முன் சென்று அங்கே உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு. ஆனந்த் அவர்கள் தலைமையில் குழு போட்டிருக்கிறார்கள்.

நான் இதில் என்ன சொல்கிறேன் என்றால் 1979 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரை நாம் இதை அரசியல் கோணத்திலே அணுகவில்லை. நிபுணர்கள் என்ன சொல்லுகிறார்கள், அதில் சம்பந்தப்பட்ட துறை வல்லுநர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்ற அந்த அடிப்படையிலேதான் அணுகி இருக்கின்றோமே தவிர அரசியல் அடிப்படையிலே அல்ல. ஆனால், ஆரம்பம் முதலே இதிலே நயவஞ்சகப் போக்கை கேரள





மாநிலம் கடைப்பிடித்து வருகிறது என்பதன் அடையாளம்தான், அண்மையிலே சட்டமன்றத்தைக் கூட்டி 132 அடிகூட அல்ல, 120 அடிக்குக் குறையுங்கள் என்றால் இதைவிட அடாவடித்தனம் என்ன இருக்கிறது? ஆகவே, இதிலிருந்து நமக்கு என்னதான் தீர்வு? இன்றைக்கும் ஊடகங்களிலே, பத்திரிகைகளிலே எழுதுகிறார்கள். இரண்டு பேரும், பொதுவாக இரு தரப்பும் பேசி முடிவிற்கு வாருங்கள் என்று சொல்வது எளிது. ஆனால், இதில் பேச்சுவார்த்தை என்பது 1979 ஆம் ஆண்டிலேயிருந்து நடக்கிறது.

"மனத்தின் அமையா தவரை எனைத்துஒன்றும்
சொல்லினால் தேறற்பாற்று அன்று."

என்கின்றார் திருவள்ளுவர். மனத்திலே பொருத்தம் இல்லாதவர்களிடத்திலே எவ்வளவு பேசியும் பிரயோசனமில்லை என்கின்றார். அதுதான் இன்றைக்குள்ள நிலைமை. ஆகையினாலே இந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு பணியாற்ற வேண்டும்.

இன்றைக்குச் சொல்லுகிறார்கள் கேரளாவிற்குப் பாதுகாப்பு தமிழ்நாட்டிற்குத் தண்ணீர். பாதுகாப்பைப் பொறுத்தவரையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அளித்த விவரங்களிலேயிருந்து தெரிகிறது. முல்லைப் பெரியாறு நீர்த்தேக்கம் உடைந்தால்கூட ஒரு 10 டி.எம்.சி. அதற்கு அடுத்திருக்கிற இடுக்கி 70 டி.எம்.சி. இது உடைந்து ஓடினாலும்கூட அங்கு ஒன்றும் ஆகாது. அதுமட்டுமல்ல, இந்த முல்லைப் பெரியாறிலிருந்து இடுக்கி வரை போகிற இந்த ஆற்றுப் படுகையிலே ஊர்கள் இல்லை. பாதிப்பு எதுவுமில்லை. அங்கே பூகம்பம் வருகிறது. நில அதிர்வுகள் வருகின்றன. மராட்டியத்திலே கிருஷ்ணா ஆற்றிலே கொய்னா அணை என்று ஒன்று கட்டி மின் உற்பத்தி செய்கிறார்கள். அங்கே இந்தப் பிரச்சினை இருக்கிறது. மராட்டியம் அதைப் பெரிதுபடுத்தவில்லை. 100 ஆண்டுகளுக்கு மேலாக 60 அணைகள் இந்தியாவில் இருக்கின்றன. அங்கெல்லாம் பெரிதுபடுத்தவில்லை. ஆனால் ஒரு விசித்திரமான நிலைமை தமிழ்நாட்டிலே மட்டும்தான் அதுவும் கேரளாமூலம்தான் ஏற்படுகிறது என்று பார்க்கிறபோது உண்மையிலே வேதனையாக இருக்கிறது. அது மட்டுமல்ல அவர்கள் சொல்கிறார்கள், "தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் தாராளமாக தருகிறோம்; ஆனால் எங்கள் மக்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்". கேரளாவிற்குப் பாதுகாப்பு, தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் என்பது சொல்வதற்குச் சுவையாக இருக்கிறது. ஆனால் உண்மை என்ன?

[திரு. ச. இராமச்சந்திரன்] [2011 டிசம்பர் 15

கேரளாவிலே இருக்கிற மக்களுக்குப் பாதுகாப்பை அவர்களால் மட்டும்தான் தரமுடியுமா? மற்றவர்களால் தர முடியவில்லையென்றால், இந்திய அரசியல் சட்டம் என்ன ஆயிற்று? இந்திய அரசியல் அமைப்பு என்ன ஆயிற்று? அவர்களுக்கு மட்டும்தான் பாதுகாப்பு என்றால் they cannot arrogate themselves to the power of protecting the life and property of the people. நமக்கும் அதிலே அக்கறை இருக்கிறது. ஆனால், அவர்கள் அந்த உரிமையை எடுத்துக்கொள்கிறார்கள். ஏன் இதையெல்லாம் குறிப்பிடுகின்றேன் என்றால் இன்றைக்கு உண்மையில் முழுவதும் 152 அடி என்று சொல்கின்றபோது 10.57 டி.எம்.சி. live storage அந்த முல்லைப் பெரியாறு அணையில். அதே 136 அடி என்று வருகின்றபோது வெறும் 6 டி.எம்.சி.தான். அது இன்னும் 120 அடி என்றால் தண்ணீர் வராது, காற்றுதான் வரும். ஆகவே, தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் என்று சொல்வது உண்மையிலேயே அது பொருத்தமான வாதம் அல்ல. உண்மையில் தமிழ்நாட்டிற்குக் கண்ணீரும், கேரளாவிற்குத் தண்ணீரும் கிடைக்குமே தவிர தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் வராது.

முற்பகல் 11–50

ஆக, இந்தச் சூழ்நிலையிலே கேரளத்தை வழிக்குக் கொண்டுவர முடியும் என்று நாங்கள் உண்மையிலேயே நம்பவில்லை. ஏனென்றால் அவர்களுடைய போக்கு ஆரம்பம் முதலே இந்தச் சூழ்நிலையில் இருக்கிறது. Central Industrial Security Force –மத்திய தொழில் பாதுகாப்பு படை கொண்டுவரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சில தினங்களுக்கு முன்னால் சட்டம் ஒழுங்கு கேரளாவை சம்பந்தப்பட்டது; Central Industrial Security Force–ஐ கொண்டுவரவேண்டுமென்றால் நாங்கள் கேரள அரசு அனுமதித்தால்தான் கொண்டுவரமுடியும் என்று மத்திய அரசு சொன்னதாக செய்திகள் வருகின்றன. அது எந்த அளவுக்கு உண்மை என்று எங்களுக்குத் தெரியவில்லை. இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த பாதிக்கப்பட்ட சூழ்நிலையிலேயிருந்து பரிகாரம் காணவேண்டுமென்றால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் சார்பாக ஒரு யோசனையைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2011 டிசம்பர் 15] [திரு. ச. இராமச்சந்திரன்]

இந்திய அரசு முல்லைப் பெரியாறு அணையை பராமரிக்கவும், இயக்கவும், நிர்வகிக்கவும்–take over the management, operations and maintenance–முல்லைப் பெரியாறு நீர்த்தேக்கத்தையும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் உடனடியாக தனது பொறுப்பில் மேற்கொள்ள ஒரு அவசர சட்டம் பிறப்பிக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். அமைதியையும் அங்கே இரு மாநிலங்களுக்கு இடையிலே ஒத்துழைப்பையும் ஏற்படுத்துகின்ற வகையிலே, உடனடியாக இராணுவத்தையும் அந்தப் பகுதிக்கு அனுப்பி அந்தப் பகுதியை பராமரிக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அதையும் தமிழ்நாடு அரசு தயவுகூர்ந்து ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல மீண்டும் பேச்சுவார்த்தை என்பது, உண்மையிலேயே சொல்கின்றேன், மனம் இல்லாதவர்களோடு பேசி பயன் இல்லை. தமிழ்நாட்டின் உரிமைகளை விட்டுக்கொடுக்க மாட்டோம் என்று இந்தத் தீர்மானத்திலே மிக அழுத்தம் திருத்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதை மீண்டும் வரவேற்று அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணையைப் பொறுத்தவரை, தமிழகத்தின் நலன்களை—குறிப்பாக, தென் மாவட்டங்களிலே உள்ள இலட்சக்கணக்கான விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும், இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் குடிநீர் ஆதாரத்திற்காகச் சார்ந்து இருக்கும் நிலையினையும்— பாதுகாத்திடும் நோக்கில், அரசினர் கொண்டுவரும் எத்தகைய தீர்மானத்தையும், மனப்பூர்வமாக ஆதரித்து வலு சேர்த்திட, திராவிட முன்னேற்றக் கழகமும், கழகத்தின் தலைவர் கலைஞர் அவர்களும், என்றைக்கும் தயார் என்பதை எடுத்த எடுப்பிலேயே அறிவித்திட விரும்புகிறேன்.

முல்லைப் பெரியாறு பாசனத் திட்டம், அப்போதைய திருவிதாங்கூர் அரசுக்கும், சென்னை மாகாண அரசுக்கும் இடையே, 999 ஆண்டுகளுக்கான குத்தகை என்ற அடிப்படையில், 29–10–1886 அன்று கையெழுத்தாகி நடைமுறைக்கு வந்த திட்டமாகும்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2011 டிசம்பர் 15

இந்த அணையின் நீர்மட்டத்தை அதன் முழுக் கொள்ளளவான 152 அடிக்கு உயர்த்துவது என்பது மிகவும் இயல்பானது. யாருடைய அறிவுரையோ, வேண்டுகோளோ இல்லாமல் அதன் போக்கில் மிகச் சாதாரணமாக நடைபெற வேண்டியது என்ற நிலை மாறி, கேரள அரசினரின் பிடிவாதப் போக்கின் காரணமாக, அதுவே ஒரு பிரச்சினையாக உருவெடுத்து, நீண்ட காலமாகத் தீர்வு எட்டப்படாமல் இருந்து வருகிறது.

இரு மாநிலங்களுக்கிடையில் பலமுறை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றும் எவ்வித முடிவும் ஏற்படவில்லை.

இதற்கிடையே கேரள அரசு 1976 ஆம் ஆண்டில் முல்லைப் பெரியாறு அணையிலிருந்து 50 கிலோ மீட்டர் தொலைவில், இடுக்கி அணையை 555 அடி உயரத்தில் கட்டியது.

இந்த இடுக்கி அணை, முல்லைப் பெரியாறு அணையைவிட மூன்றரை மடங்கு பெரியது. அணையின் கொள்ளளவோ, முல்லைப் பெரியாறு அணையின் கொள்ளளவைவிட ஏழு மடங்கு அதிகம்.

இடுக்கி அணை நீர்ப்பாசன அணை அல்ல. புனல் மின்சாரம் தயாரித்திட வேண்டுமென்றே கட்டப்பட்டதாகும்.

ஆனால், அதற்குத் தண்ணீர் முல்லைப் பெரியாறு அணையிலிருந்துதான் வரவேண்டும். முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தைக் குறைத்தால்தான் இடுக்கி அணைக்குத் தண்ணீர் வரும். இதையும் மனதிலே கொண்டுதான், உள்நோக்கத்தோடு, கேரள அரசு தொடர்ந்து முல்லைப் பெரியாறு அணை குறித்து பூகம்பமாக உண்மைக்கு மாறான செய்திகளைப் பரப்பி வருகிறது.

முற்பகல் 11–55

1979 ஆம் ஆண்டில் கேரள அரசு, பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்து ஒருசில அச்சங்களை எழுப்பியதைத் தொடர்ந்து, அந்த அச்சங்களையும் போக்குவதற்காக, 1980 முதல் 1994 வரை தமிழக அரசின் சார்பில் அணையை வலுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பெரும்பாலான பணிகள் முடிந்துவிட்டன.



2011 டிசம்பர் 15] [திரு. மு.க. ஸ்டாலின்]

முல்லைப் பெரியாறு பிரச்சினையில், நியாயமான உரிய தீர்வு காண கலைஞர் தலைமையில் இருந்த தமிழக அரசு 1998 டிசம்பரில் இந்திய உச்ச நீதிமன்றத்தை அணுகியது. இந்திய உச்ச நீதிமன்றம், முல்லைப் பெரியாறு அணை வழக்கில் 27–2–2006 அன்று அளித்த தீர்ப்பில் அணை பலம் இழந்துவிட்டது என்ற கேரளாவின் கூற்றுக்கு எவ்வித முகாந்திரமும் இல்லையென்றும் தமிழ்நாடு 142 அடி வரை நீரைத் தேக்கிக்கொள்ளலாம் என்றும், மீதமுள்ள பலப்படுத்தும் பணிகளைச் செய்து முடித்தவுடன், உச்ச மட்ட அளவான 152 அடி வரையில் தமிழ்நாடு நீரைத் தேக்கி வைக்கலாம் என்றும் உத்தரவுகள் வழங்கியது.

இந்திய உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளை அரசியல் சட்ட நியாயங்களின்படி நிறைவேற்றாமல் கேரள அரசு உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு மாறாக சட்டத் திருத்தம் ஒன்றை நிறைவேற்றி முல்லைப் பெரியாறு அணையின் முழு நீர் மட்டத்தை தன்னிச்சையாக 136 அடி என நிர்ணயித்துக்கொண்டது.

இதைச் சுட்டிக்காட்டி, தமிழக அரசால் அதாவது உங்கள் ஆட்சிக் காலத்திலேதான் உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் ஒரு கட்டமாகத்தான் உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி டாக்டர் ஏ.எஸ். ஆனந்த் அவர்களின் தலைமையில் அதிகாரம் படைத்த குழு ஒன்றை நியமித்தது. கேரள அரசும், தமிழக அரசும் இடம் பெற்றுள்ள இந்தக் குழு ஏற்கெனவே முல்லைப் பெரியாறு அணையைப் பார்வையிட்டதோடு மீண்டும் பார்வையிட்டு விரைவில் அறிக்கையும் அளித்திடவுள்ளது.

இந்த நிலையிலேதான், கேரளாவிலே உள்ளவர்கள் முல்லைப் பெரியாறு அணைக்கு ஆபத்து, பூகம்பம், சுற்றுச்சூழலுக்கும், வன விலங்குகளுக்கும் பாதிப்பு, பேரழிவு என்றெல்லாம் இட்டுக்கட்டிய கற்பனையான அச்சுறுத்தல்களையும், உண்மைக்கு மாறான செய்திகளையும், வதந்திகளையும் வேகமாக உலவவிட்டு இரு மாநிலங்களுக்கிடையே விபரீதத்தையும், வேதனைகளையும் உருவாக்கியிருக்கிறார்கள். இந்த இக்கட்டான சூழ்நிலையில், அரசியல் சட்டத்திலே கூறப்பட்டுள்ள அம்சங்களின் அடிப்படையிலே நடவடிக்கை எடுத்திட வேண்டிய மத்திய அரசு இந்தப் பிரச்சினை உச்ச நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வருவதாலோ என்னவோ சுணக்கம் காட்டுகிறது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2011 டிசம்பர் 15

பலமுறை நடந்த பேச்சுவார்த்தைகளால் பலனில்லை. அரசியல் ரீதியான தீர்வுகளுக்கு கேரள அரசு முன் வரவில்லை. நிபுணர் குழுக்களின் கருத்துகளுக்கு அங்கே மரியாதை இல்லை. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு உரிய மதிப்பில்லை. கூட்டாட்சித் தத்துவமும், ஜனநாயகமும் கேலிக் கூத்தாக்கப்படுகின்றன. அருகில் உள்ள மாநில மக்களின் உணர்வுகளை மதிக்கும் மனப்பாங்கோ, மனித நேயமோ துளியும் இல்லை. காலங்காலமாகப் பேணப்பட்டு வந்த உறவும், நட்பும் அரசியலுக்காகக் காவு கொடுக்கப்படுகின்றன.

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் கேரளாவிற்குச் செல்லும் தமிழர்கள் தாக்கப்பட்டு வருகிறார்கள். தமிழர்களுக்குச் சொந்தமான நிறுவனங்களும் தாக்கப்படுகின்றன. உதாரணமாக, கம்பம்மெட்டு அருகே இருக்கக்கூடிய புளியமலையில் கம்பம் தொகுதியின் சட்டப் பேரவை உறுப்பினர் என். இராமகிருஷ்ணனுக்கு சொந்தமான பெட்ரோல் பங்க் தகர்க்கப்பட்டுள்ளது. மேலும், அவருக்கு சொந்தமான ஏலத் தோட்டமும் அழிக்கப்பட்டுள்ளது. அவரது பண்ணை வீட்டையும் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். அதுபோலவே போடி தொகுதி அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ., ராமராஜுக்கு சொந்தமான ஏலக்காய் எஸ்டேட்டையும் சூறையாடியிருக்கிறார்கள். இவையெல்லாம் அங்கே தொடர் நடவடிக்கைகளாக நடந்து வருகின்றன.

புனல் மின்சாரத்திற்காக, இலட்சோபலட்சம் மக்களின் வாழ்வாதாரத்தைப் புழுதியில் தள்ளிப் புரட்டியெடுக்கும் வரலாற்றுக் கொடுமை நம் கண்ணெதிரே நடந்தேறி வருகிறது. கேரளாவின் பொல்லாத இந்தப் போக்கைத் தட்டிக் கேட்கவும், இந்தப் பிரச்சினையில் ஒரு முடிவு ஏற்படும் வரையில் முல்லைப் பெரியாறு அணைப் பகுதியை மத்திய பாதுகாப்பு படையினரின் பொறுப்பில் விடவேண்டும். உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டபடி, அணையின் நீர்மட்டம் 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தப்பட வேண்டும். இரு மாநிலங்களிலும் பரவிவரும் வன்முறைக் கலாச்சாரத்தை இனியும் தாமதிக்காமல் தடுத்திட மத்திய அரசும், மாநில அரசுகளும் உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை வலியுறுத்திடவும், தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் கூடிய தி.மு. கழகச் செயற்குழுவில் மேற்கொண்ட விரிவான தீர்மானத்தின் தொடர்ச்சியாக, 12–12–2011 திங்கட்கிழமையன்று



2011 டிசம்பர் 15] [திரு. மு.க. ஸ்டாலின்]

தமிழகத்திலுள்ள அனைத்து மாநகரங்களிலும், நகரங்களிலும் பத்து இலட்சம் தமிழ் மக்கள் பங்கேற்ற ஒரு நாள் உண்ணாநிலைப் போராட்டத்தையும், 14–12–2011 புதன்கிழமையன்று முல்லைப் பெரியாறு அணையினால் பாசன வசதி பெறக்கூடிய தேனி, மதுரை, சிவகங்கை, திண்டுக்கல், இராமநாதபுரம் மாவட்டங்களில் உணர்ச்சிப் பெருக்கோடுகூடிய மாபெரும் மனிதச் சங்கிலி அணி வகுப்பையும் தி.மு.க.வின் சார்பாக நடத்தி இருக்கிறோம். அண்ணா வழி – அறவழி – அமைதி வழி உருவாகிடவும்; உரிமையாகக் கிடைத்திட வேண்டிய தண்ணீருக்காக, உதிரம் சிந்திடும் வன்முறை தவிர்த்து, நன்முறை திரும்பிடவும்; கலைஞரின் கழகம் இந்தப் பிரச்சினையில், இந்த அரசுக்கு உற்ற துணையாகத் திகழ்ந்திடும் என்ற உறுதியைத் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

*__திரு. க. பாலகிருஷ்ணன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் தமிழகத்தினுடைய உரிமையை நிலைநாட்டுகிற வகையிலும், நீண்டகாலமாக நீடித்து வருகிற இந்தப் பிரச்சினையில் தமிழகத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் கருத்து ஒற்றுமையினை வெளிப்படுத்தும் வகையிலும் நடைபெறுகிற இந்தச் சிறப்புச் சட்டப் பேரவை கூட்டத்திற்கும், இந்த அவையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் முன்மொழியப்பெற்றிருக்கிற இந்தத் தீர்மானத்தையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்கிறோம்.

முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை ஏறக்குறைய 1979 ஆம் ஆண்டு முதல் நீடித்து வருகிற பிரச்சினையாகும். ஏற்கெனவே, இங்கே உரையாற்றிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதனுடைய பல்வேறு விவரங்களையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, 1979 ஆம் ஆண்டு இந்த அணை பாதுகாப்பற்றது என்று கேரள அரசு பிரச்சினை எழுப்ப உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி மத்திய நீர்வள ஆணையத்தினுடைய ஆலோசனையின் அடிப்படையில், ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டு, அந்த நிபுணர் குழு அனைத்து வகையான

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2011 டிசம்பர் 15

ஆய்வுகளையும் மேற்கொண்டு, 'இந்த அணை பாதுகாப்பானது' என்கிற வகையிலே உச்ச நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தது. அந்த அறிக்கையின்மீது கேரள அரசு 34–க்கும் மேற்பட்ட பிரச்சினைகளை எழுப்பி, அவற்றிற்கெல்லாம் விளக்கம் கேட்டபோது, அந்த விளக்கங்களுக்கெல்லாம் அந்த நிபுணர் குழுவின் சார்பிலே இருக்கிற மத்திய நீர்வளக் குழு ஆணைய அதிகாரிகள் மிகத் தெளிவான விளக்கங்களைத் தந்த பிறகுதான், அந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டு உச்ச நீதிமன்றம் 27–2–2006 ஆம் நாளன்று குறிப்பிடத்தக்க தீர்ப்பினை வழங்கியது. அந்தத் தீர்ப்பினை அப்போதே கேரளம் ஏற்று அமலாக்கியிருக்க வேண்டும். அந்தத் தீர்ப்பினை ஏற்காதது மட்டுமல்ல அந்தத் தீர்ப்பின்மீது ஒரு மறு சீராய்வு மனுவினை உச்ச நீதிமன்றத்திலே தாக்கல் செய்த அம்மனுமீதும் உச்ச நீதிமன்றம் விவாதித்து, கேரள அரசு தாக்கல் செய்த அந்த மறு சீராய்வு மனுவினையும் தள்ளுபடி செய்துவிட்டது. அப்படித் தள்ளுபடி செய்துவிட்ட பிறகு, அந்தத் தீர்ப்பினை ஏற்பதற்கு மாறாகத்தான், கேரள நீர்ப் பாசன பாதுகாப்பு சட்டத் திருத்தம் என்கிற சட்டத்தை, அரசியல் சாசனத்திற்கு விரோதமாகவும், உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை செல்லாததாக்குகிற வகையிலேயும் சட்ட சபையிலே அவர்கள் நிறைவேற்றினார்கள்.

அன்றையதினம் அந்தச் சட்டத்திருத்தம் ஏற்புடையதல்ல; அது அரசியல் சாசனத்திற்கு விரோதமானது; உச்ச நீதிமன்றத் தீர்ப்பைச் செல்லாததாக்குகிற வகையிலே இருக்கிறது என்று மத்திய அரசு, அந்தச் சட்டத்திருத்தத்தை அப்போதே தெளிவுப்படுத்தியிருப்பார்களேயானால் தமிழக அரசு மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. ஆனால், மத்திய அரசு எப்போதுமே இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட இந்த நதிநீர் தாவாப் பிரச்சினைகளில் ஆக்கபூர்வமான முறையிலே தலையிட்டு தீர்வு காணுவதிலே அக்கறை இல்லாத காரணத்தினால் அவ்வாறு செய்யவில்லை. எனவே, அன்றைக்கு நம்முடைய உரிமையை வற்புறுத்திட நாம் உச்ச நீதிமன்றத்திலே மனு தொடுத்து, அந்த வழக்கு இப்போது நிலுவையிலே இருக்கிறது. அந்த வழக்கு விசாரணையிலேதான் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தால் முன்னாள் தலைமை நீதிபதி திருமிகு ஏ.எஸ். ஆனந்த் அவர்களுடைய தலைமையிலே அமைக்கப்பட்டுள்ள அதிகாரம் பெற்ற குழுவின்முன்பு அந்தப் பிரச்சினை விசாரணையில் இருக்கிற சூழ்நிலையில், கேரள அரசு



2011 டிசம்பர் 15] [திரு. க. பாலகிருஷ்ணன்]

இப்போது அணையினுடைய நீர்மட்டத்தை 120 அடியாக குறைக்க வேண்டும்; புதிய அணையைக் கட்ட வேண்டும் என்கிற அடிப்படையிலே சட்டமன்றத்திலே தீர்மானத்தை நிறைவேற்றியது மட்டுமல்லாமல், கேரளத்திலே போராட்டங்களை நடத்துவது ஏற்புடையது அல்ல என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

பிற்பகல் 12–05

உச்ச நீதிமன்றத்தின் அதிகாரம் பெற்றிருக்கிற ஐந்து பேர் கொண்ட அந்தக் குழுவின்மூலம் பல நிபுணர் குழுக்களை அமைத்து, அந்த அணையினுடைய பலம் உள்பட ஆய்வு செய்து வருகிறது. ஏற்கெனவேயும் அந்த அணை பலமாக இருக்கிறது என்ற தீர்ப்பு வந்திருக்கிற சூழ்நிலையில், மீண்டும் எள்ளளவும் சந்தேகமற்ற முறையிலே அந்த அணையினுடைய பாதுகாப்பை உறுதிபடுத்துவதற்காக பல ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த அதிகாரம் பெற்ற குழு, வருகிற பிப்ரவரி மாதம் தன்னுடைய இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதன்மீது உச்ச நீதிமன்றம் உடனடியாக விரைந்து தீர்ப்பை வழங்கி, இந்தப் பிரச்சினையிலே ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்று இந்த நேரத்திலே நாங்கள் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்தச் சூழ்நிலையில் முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில், கேரளாவிலே ஒரு தேவையற்ற, உண்மைக்குப் புறம்பாக, அந்த அணை பாதுகாப்பற்றது, அது உடையப் போகிறது என்கிற முறையிலே அங்கே அச்சத்தைக் கிளப்புகிற வகையில், மக்கள் மத்தியிலே பீதியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கிராஃபிக்ஸ் தயாரிக்கப்பட்டு மக்களைக் குழப்பியுள்ளார்கள். 'டேம் 999' என்கிற திரைப்படம் மேலும் இந்தப் பிரச்சினையிலே எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றுவதுபோன்று அமைக்கப்பட்டு, அங்கே மக்கள் மத்தியிலே கொந்தளிப்பை உருவாக்கி இருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் இதையெல்லாம் பயன்படுத்தி ஒரு அமைதியற்ற நிலைமை அங்கேயும் உருவாக்கப்பட்டிருக்கிறது, இங்கேயும் உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த அவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோரியிருப்பதைப்போல அந்த அணை இன்றைக்கு பாதுகாக்கப்பட வேண்டும் என்கிற அடிப்படையில், மத்திய தொழிற் பாதுகாப்புக் குழு பராமரிப்பிலே அந்த அணை ஒப்படைக்கப்பட வேண்டும் என்று நாங்கள்

*[திரு. க. பாலகிருஷ்ணன்]* [2011 டிசம்பர் 15

வற்புறுத்துகிறோம். ஆனால், அப்படி மத்திய தொழிற் பாதுகாப்புக் குழு அனுப்ப வேண்டுமென்று சொன்னால், கேரளாவும் ஏற்றுக்கொண்டால்தான் அதை அனுப்ப முடியும் என்று நம்முடைய பாரத பிரதமர் அவர்கள் தெரிவித்ததாக வந்திருக்கிற செய்தி, எந்த அளவிற்கு உண்மையோ, இல்லையோ நமக்குத் தெரியாது. ஆனால், அது உண்மையாக இருக்கும் என்று சொன்னால், அது ஏற்புடையது அல்ல. கேரளாவும் ஏற்றுக்கொண்டால்தான் அங்கே தொழிற் பாதுகாப்புக் குழு அமைக்க முடியும் என்று சொன்னால், கேரளா ஏற்றுக்கொண்டால் பிரச்சினையே இருக்காது. எனவே, அந்த அணை பாதுகாப்பிற்கு மத்திய அரசினுடைய தொழிற் பாதுகாப்புப் படையை அனுப்ப வேண்டும் என்று இந்த நேரத்திலே நாங்கள் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

மேலும், இதுகாறும் இந்தப் பிரச்சினையில் தமிழக முதல்வர் ஆத்திரமூட்டலுக்கு இரையாகாமல், நிதானமான முறையிலே இந்தப் பிரச்சினையை அணுகி வருவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நாங்கள் வரவேற்கிறோம். இது நிச்சயமாக அரசியல் பிரச்சினை அல்ல. இதை அரசியல் பிரச்சினையாக்கி ஆதாயம் தேடுகிற முறையிலே சிலர் ஈடுபடுவதை நான் கவலையோடு இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு எல்லை மாவட்டமாக இருக்கிற தேனி மாவட்டத்தில் ஒரு பதட்டமான சூழ்நிலை நிலவுகிறது. கேரளத்திலேயும் பதட்டமான சூழ்நிலை நிலவுகிறது. நீண்ட நெடுங்காலமாக சகோதர பாசத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிற கேரளா, தமிழக மக்கள் மத்தியில் ஒரு பதற்றத்தை உருவாக்கி, மோதலை உருவாக்கி, ஆதாயம் தேடுவதற்கான எந்தவிதமான முயற்சிக்கும் யாரும் இடமளித்துவிடக் கூடாது என்பதை நாங்கள் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். இன்னும் சொல்லப்போனால், ஒரு சுமுகமான சூழ்நிலை, அமைதியான சூழ்நிலை ஏற்படுகிறபொழுதுதான் இப்படிப்பட்ட எல்லை, நதிநீர் தாவா பிரச்சினைகள், இரண்டு மாநிலப் பிரச்சினைகள் நல்ல தீர்வை எட்ட முடியும் என்பதையும் இந்த அவையிலே நாங்கள் பதிவு செய்ய விரும்புகிறோம்.

எனவே, இந்தச் சூழ்நிலையில் இன்றைக்கு நாங்கள் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புவது எல்லாம் மத்திய அரசு இதிலே அக்கறையற்று இருக்காமல், அவசரமாக தலையிட வேண்டும்



2011 டிசம்பர் 15] *[திரு. க. பாலகிருஷ்ணன்]*

என்று கேட்டுக்கொள்கிறோம். உண்மையிலேயே இன்றைக்கு உச்ச நீதிமன்ற விசாரணையிலே அணையினுடைய பாதுகாப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் இருக்கிறபொழுது, அவை சம்பந்தமாக மத்திய அரசு பேசி, எந்த நியாயமான தீர்வும் எட்ட முடியாது. ஆனால், அந்தப் பிரச்சினைகளைத் தவிர்த்து, உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வருகிற வரையிலே நாம் எதிர்பார்த்திருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிற அதே நேரத்தில் இன்றைக்கு இரண்டு மாநிலங்களிடையேயும் ஏற்பட்டிருக்கிற பதற்றமான சூழ்நிலை, இங்கேயும் அசம்பாவிதங்கள், அங்கேயும் அசம்பாவிதங்கள் என்கிற இந்த நிலைமையைத் தடுக்க வேண்டியது அவசியமானதாகும்.

சட்டம்–ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய, இரண்டு மாநில மக்களுடைய, தமிழர்கள்– மலையாள மக்களுடைய உயிருக்கும், உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பும், கடமையும் அனைவருக்கும் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மத்திய அரசு இரண்டு மாநிலங்களிலேயும், அங்கே தமிழர்களுக்கு பாதுகாப்பு, இங்கே மலையாளிகளுக்கு ஆபத்து இல்லாவிட்டாலும், இங்கேயும் பாதுகாப்பை உறுதி செய்வது, அதனால் ஏற்படும் பதற்றத்தைப் போக்குவது, சட்டம்–ஒழுங்கைப் பாதுகாப்பது, சுமூகமான நிலைமை நீடிப்பதற்கு மத்திய அரசு இரண்டு மாநில அரசுகளையும் அழைத்து, அத்தகைய அம்சங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அத்தகைய பேச்சுவார்த்தையில் தமிழக அரசு கலந்துகொண்டு இரண்டு மாநிலங்களிலும் சட்டம்–ஒழுங்கை பாதுகாக்கிற அப்படிப்பட்ட கடமையை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம். முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் எந்தச் சூழ்நிலையிலேயும் தமிழகத்தினுடைய தண்ணீர் உரிமையை விட்டுக்கொடுக்க மாட்டோம், இரண்டு மாநில மக்களுடைய பாதுகாப்பு, அமைதி, ஒற்றுமையைப் பாதுகாப்போம் என்ற வகையிலே பிரச்சினையை அணுகுவது அனைவருக்கும் பொருத்தமானது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே தெரிவித்து அமைகிறேன். நன்றி.

*பிற்பகல் 12–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

[2011 டிசம்பர் 15

*திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கொடுத்த விளக்கத்தையும், இங்கே அவர்கள் முன்மொழிந்து கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தையும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே முழுமனதோடு நாங்கள் வரவேற்கிறோம். முல்லைப் பெரியாறு சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகளை பல நேரங்களில் பல தலைவர்கள் விளக்கமாக விரிவாக விளக்கியிருக்கிறார்கள். அதையே மீண்டும் மீண்டும் நான் விளக்க விரும்பாத ஒரு நிலையில் இன்றைக்கு கேரள அரசியல் தலைவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற பல்வேறு சூழ்நிலைகளால் கேரள மக்களிடையே ஒரு பீதியும், அதையொட்டி தமிழக எல்லை மாவட்டமான தேனி மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கிற பதற்றமும் என்றைக்கும் சகோதரர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிற இரண்டு மாநில மக்களிடையே தேவையில்லாத ஒரு சூழல் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்கு கேரள அரசியல் தலைவர்கள் முழு பொறுப்பை ஏற்று தங்களுடைய தவறுகளை உணர்ந்து முல்லைப் பெரியாறு பிரச்சினையிலும் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வர வேண்டும். அதைப்போல மக்கள் சகோதரத்துவத்தோடு அமைதியாக வாழ்ந்திட ஒரு உறுதியான நிலையை மேற்கொள்ள வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தில் மத்திய தொழிற் பாதுகாப்புப் படையை உடனே அனுப்ப வேண்டும், அணையை பாதுகாக்க வேண்டுமென்று சொல்லியிருப்பது காலத்தின் சிறந்த ஒரு கோரிக்கையாக, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நாங்கள் வரவேற்கிறோம். உடனடியாக மத்திய அரசு இந்த கோரிக்கையை, தமிழக சட்டமன்றத் தீர்மானத்தை மதித்து, தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து, உடனடியாக மத்திய தொழிற் பாதுகாப்புப் படையை பெரியார் அணைக்கு அனுப்பி அந்த அணையைப் பாதுகாக்கிற முதற்கட்ட நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இந்தத் தீர்மானத்தின் கடைசிப் பத்தியில் "அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்தவும், எஞ்சியுள்ள நீண்டகால



2011 டிசம்பர் 15] [திரு. சு. குணசேகரன்]

அணை பலப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளவும், கேரள அரசு தமிழகத்திற்கு தடை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும்" என்று இங்கே முன்மொழியப்பட்டு இருக்கிறது. இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் தமிழக முதல்வர் அவர்களுக்கு வைக்கக்கூடிய ஒரு கோரிக்கை, இந்தக் கடைசிப் பத்தியில் "மத்திய அரசும் அதற்கு உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என்பதையும் இணைத்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் தமிழக அரசு மேற்கொள்ளும் நிதானமான, உறுதியான, பொறுப்புமிக்க செயல்பாட்டை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. அப்துல் கலாம் அவர்கள் உள்ளிட்ட பல தலைவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் நதிகளை தேச உடைமை ஆக்குவதையும், நதிகளை இணைத்து நீராதாரத்தை ஒருமுகப்படுத்தி பயன்படுத்தவும், மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

1800 ஆம் ஆண்டுகளில் தாது வருடத்தில் ஏற்பட்ட வரலாறு காணாத பஞ்சமும் அதனால் அன்றைய மதுரை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டங்களில் ஏற்பட்ட பட்டினிச் சாவுகளும்தான் இராமநாதபுர மன்னன் சேதுபதியின் யோசனையில் உருவான பெரியாறு அணை கட்டும் திட்டம். பின்னர் அடிமை இந்தியாவில் மிகச் சிறந்த பொறியாளரான மனிதாபிமானமிக்க பொறியாளர், பென்னி குயிக்கால் பெரியாறு அணை கட்டி முடிக்கப்பட்டது.

பிற்பகல் 12–15

அதனால் அன்றைய மதுரை, இராமநாதபுரம் மாவட்ட மக்கள் பயன்பட்டது மட்டுமின்றி, இந்தியாவின் உணவு உற்பத்தியும் அதிகப்படுத்தப்பட்டது. ஓர் அணையின் நோக்கமே பன்முகத் தன்மையை அடிப்படையாகக் கொண்டது. குறிப்பாக நீர் வளத்தை வீணாக்காமல் முறைப்படுத்தி பாசனத்திற்குப் பயன்படுத்துவது, உணவு உற்பத்தியைப் பெருக்குவது, மின் உற்பத்தி,

[திரு. சு. குணசேகரன்] [2011 டிசம்பர் 15

குடிநீர், கால்நடை பராமரிப்பு அதன்மூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது அத்தகைய பன்முகத்தன்மையோடு வடிவமைக்கப்பட்டதுதான் பெரியாறு அணை.

உயிரினத்தின் முதல் தேவை சுவாசிக்க காற்றும், குடிக்க நீரும், உண்ண உணவும். பிறகுதான் அனைத்துத் தேவைகளும். மற்றத் தேவைகள் இம்மூன்றையும் பெறுவதற்காக நாம் உருவாக்கிக்கொண்ட வழிமுறைகள்தான். இந்நிலையில் கேரளாவில் உள்ள அரசியல் கட்சிகள் அடிப்படை நியதிகளையே தவிர்க்கும் விதமாக, பெரியாறு அணையைப் பற்றிய சர்ச்சைகளை கிளப்புகின்றன. இதை, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கடுமையாக, வன்மையாகக் கண்டிக்கிறோம். பெரியாறு அணை உடையும் என்று கேரள அரசியல் தலைவர்கள் கூறும் காரணங்கள் எதுவும் அறிவியல் தன்மையற்றது. பல பொறியாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு, அணை பலத்தோடு இருக்கிறது என்றும் கூறியுள்ளார்கள். அணை பழமையானது, 100 ஆண்டுகளைத் தாண்டியுள்ளது என்ற காரணம் ஏற்புடையதல்ல. ஏனெனில், பெரியாறு அணையைவிட மிக அதிகளவில் வெள்ளம் வரும் கோதாவரியில் பெரியாறு அணைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்பு ஆர்தர் கார்ட்டனால் டௌளீஸ்வரம் அணை கட்டப்பட்டு அது பாதுகாப்பாக இருக்கிறது. அதைப் பற்றிய சர்ச்சை இதுவரை எழவில்லை. அதற்கு அடிப்படையான காரணம், அது ஆந்திர மாநிலத்திலேயே, ஒரே மாநிலத்தின் உள்ளேயே இருப்பதுதான்.

உலகில் பல நாடுகளில் பல நூற்றாண்டு காலத்தைக் கடந்த பல அணைகள் உள்ளன. நமது தமிழ்நாட்டில் கல்லணையும் அதில் ஒன்று. கேரள அரசியல் தலைவர்கள் கூறும் காரணங்கள் எதுவும் உண்மை இல்லையென்று விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இடுக்கி அணையில் நீரை தேக்குவதும், பெரியாறு அணைப் பகுதியில், நீர்ப் பிடிப்புப் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளைப் பாதுகாப்பதுமே அவர்களுடைய குறிக்கோள். ஆதலால், வளர்ந்துவரும் இந்திய நாட்டின் மக்கள் தொகைக்கு ஏற்ப, உணவு உற்பத்தி பாதுகாப்பைப் பற்றி அவர்கள் கொஞ்சம்கூட அக்கறை கொள்ளவில்லையே என்று எண்ணும்போது வேதனையாக உள்ளது.

நில நடுக்கம் வந்தால், அணை உடையும்; சுனாமி வந்தால் பாதிப்பு வரும் என்றும் கூறுபவர்கள், பஸ் மோதினால், ரயில் விபத்து ஏற்பட்டால், விமானம் தீப்பற்றினால் என்று ஒவ்வொன்றுக்கும் ஏற்பட்டால் ஏற்பட்டால் என்று கேள்விகளை எழுப்பிக்கொண்டால், அதற்கு யாராலும், விடையும், தீர்வும் காண முடியாது. அதற்கு ஒரே தீர்வு, அப்படி எண்ணுபவர்கள் நம்மிடையேயிருந்து ஒழிக்கப்பட்டால்தான் நம் நாடு வளர்ச்சி அடைய முடியும். அந்த அடிப்படையில் மத்திய அரசு பெரியாறு அணை பிரச்சினையைத் தமிழக கேரள பிரச்சினையாகப் பார்க்காமல், தேசத்தின் பிரச்சினையாகப் பார்த்து, உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்த உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பெரியாறு அணையை மாற்றி புதிய அணையைக் கட்டுவது அல்லது அதன் நீர்த்தேக்க உயரத்தைக் குறைப்பது என்பது எந்த நோக்கத்திற்காக பெரியாறு அணை கட்டப்பட்டதோ, அந்த நோக்கத்தைச் சிதைப்பதாக அமையும். எனவே கேரள அரசு மட்டுமல்ல, மத்திய அரசும் உண்மையிலேயே தமிழக மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றால், பெரியாறு அணையைப் பற்றிய உண்மைக்குப் புறம்பான பிரச்சாரத்தைக் கைவிட்டு, பெரியாறு அணையைப் பாதுகாத்து, 152 அடி உயரத்திற்குத் தண்ணீரைத் தேக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.



2011 டிசம்பர் 15] [திரு. சு. குணசேகரன்]

நமது தமிழகத்திலே ஒரு பழமொழி உண்டு, “மங்கை சூதகமானால், கங்கையில் குளிக்கலாம், கங்கை சூதகமானால் எங்கே செல்வது” என்று. அதற்கு விடை, மக்கள்தான் அந்த கங்கையைப் புனிதப்படுத்த வேண்டும். எனவே, இன்றைக்கு ஒரு குறுகிய அரசியல் நோக்கத்திற்காக, கேரளாவில் இருக்கக்கூடிய அரசியல் தலைவர்கள், இந்தியாவிலேயே படித்த மக்கள் அதிகம் வாழ்கிற கேரள மாநிலத்திலேயே மக்களை இப்படிப்பட்ட உண்மைக்குப் புறம்பான செய்திகளின் மூலமாக பதற்றத்தையும், பீதியையும் உருவாக்கி, தேசத்தின் உணவு உற்பத்தியைப் பாதிக்கிற விதமாக தமிழகத்திலே இருக்கிற கிட்டத்திட்ட இரண்டரை இலட்சம் ஏக்கருக்கு மேலான உணவு உற்பத்தியை பாதிக்கிற விதமாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, சிவகங்கை மாவட்டத்தில் பெரியாறு அணையின் மூலமாக சுமார் 44 ஆயிரம் ஏக்கர் பரப்பிற்கு கடந்த 1976 ஆம் ஆண்டுக்குப் பின்னால் இதுவரை உத்தரவாதமான தண்ணீர் கிடைக்காமல் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் மீண்டும் வறட்சிக்கு

[திரு. சு. குணசேகரன்] [2011 டிசம்பர் 15

இலக்காக்கப்பட்டு இருக்கிறார்கள். வேலைவாய்ப்பு இல்லாமல், வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலை நீடித்து, மீண்டும் 120 அடியாக குறைக்கப்படும் என்று சொன்னால், கேரளா முன்வைக்கிற கேரள மக்களுக்குப் பாதுகாப்பு, தமிழகத்திற்கு தண்ணீர் என்ற கோரிக்கை அது வெற்றுக் கோரிக்கையாக மாறுமே தவிர, தமிழ்நாட்டிற்கு ஒரு சொட்டு தண்ணீர்கூட கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. ஏனென்று சொன்னால், அங்கே இருக்கிற நில அமைப்பும், அணை அமைந்திருக்கிற சூழலும், மலையினுடைய தன்மைகளும், பெரியாறு அணையிலிருந்து கீழாக 100 அடியோ அல்லது 200 அடியோ இறக்கி அணையைக் கட்டினால், கண்டிப்பாக அங்கேயிருந்து தமிழகத்திற்குத் தண்ணீர் பெறுவதற்கான வாய்ப்பே இல்லாத ஒரு நிலை நீடிக்கும்.

பிற்பகல் 12–20

எனவேதான், அப்படிப்பட்ட நிலையில் கேரள மாநிலத்தில் இருக்கக்கூடிய அரசியல்வாதிகளை, படித்த, கல்வியிலே உயர்ந்திருக்கக்கூடிய கேரள மக்களே திருத்த வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழலை உருவாக்க வேண்டுமென்று கேட்டு, தமிழக முதல்வர் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை நான் சொன்ன அந்தத் திருத்தத்தோடு அவர்கள் மீண்டும் முன்மொழிய வேண்டுமென்று அன்போடு கேட்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்திலே இன்று தமிழக மக்களின் உணர்வாக இருக்கக்கூடிய முல்லைப் பெரியாறு பிரச்சினையில் நமது மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற தீர்மானத்தை தமிழக காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நாங்கள் வரவேற்கின்றோம்.

தமிழக காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில், தமிழக மக்களுடைய உணர்விலே முழுமையாக எங்களையும் நாங்கள் இணைத்துக்கொள்கின்றோம். இன்றைக்கு கேரள மாநிலத்திலே பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களுடைய சுயநலப் போக்கின்



2011 டிசம்பர் 15] [திரு. என்.ஆர். ரெங்கராஜன்]

காரணமாக பல்வேறு உணர்வுகள் அந்த மக்களிடையே தூண்டிவிடப்பட்டு, பய உணர்வு தூண்டிவிடப்பட்டு, இன்றைக்கு இரண்டு மாநிலங்களுக்கிடையே, மக்களுக்கிடையே இருக்கக்கூடிய நட்புணர்வும், பாச உணர்வும், சகோதரத்துவமும் சிதைக்கப்பட்டிருக்கின்றது. எனவே, காங்கிரஸ் கட்சியின் சார்பாக இத்தகைய சூழ்நிலையை மிகுந்த வருத்தத்தோடும், இது மாற வேண்டுமென்ற எண்ணத்தோடும் இதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இன்றைக்குக் கேரளாவில் பல்வேறு போரட்டங்களை நடத்தி வருகின்ற மக்களை அமைதிப்படுத்த வேண்டுமென்பதற்காக பாரதப் பிரதமர் அவர்களை சந்தித்த கேரள மாநில முதல்வரிடம் பாரதப் பிரதமர் அவர்கள் போராட்டங்களைக் கைவிட வேண்டுமென்று மிகுந்த கண்டிப்போடு கூறி, அவர்களுக்கு நல்ல அறிவுரைகளையும் வழங்கி அனுப்பியுள்ளார்கள். எனவே, மத்திய அரசும் இதைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்சினை தீரவேண்டுமென்ற எண்ணத்தோடு கவலைகொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

எனவே, இப்படிப்பட்ட ஒரு உணர்வை, இந்த நேரத்திலே தமிழக மக்களுக்கு இருக்கக்கூடிய உணர்வை காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற வகையிலே மரியாதைக்குரிய தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்திலே, குறிப்பாக, மத்திய தொழிற் பாதுகாப்புப் படையினுடைய பாதுகாப்பு வேண்டுமென்றும் தீர்மானத்திலே அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதற்காக நேற்றுகூட எங்களது தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஞானதேசிகன் அவர்களுடைய தலைமையிலே எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்களெல்லாம் அவர்களுடைய உணர்வுகளை பாராளுமன்றத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்து தெரிவித்திருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை மீண்டும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக வரவேற்று, ஆதரித்து அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் அவர்கள்.

**திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணையைப்

பாதுகாக்க வேண்டுமென்று, அந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்திற்கு உத்தரவாதம் கொடுக்கின்ற வகையில் இந்தச் சிறப்பான கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, ஒரு சிறப்பான தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகப் பாராட்டுகின்றோம், வரவேற்கின்றோம். அதே நேரத்தில், முல்லைப் பெரியாறு அணை இருக்கின்ற பகுதி தேவிகுளம், பீர்மேடு பகுதிகளைச் சார்ந்தது. இந்த தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் இதற்கு முன்பு தமிழகத்திலிருந்து பிரிக்கப்பட்டு கேரள மாநிலத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. மீண்டும் இந்த தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை கேரள மாநிலத்திலிருந்து பிரித்து, அவற்றை தமிழகத்துடன் இணைக்க வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்துகின்ற வகையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றோம். இந்தத் தீர்மானத்தைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்று விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழு கோடி தமிழக மக்களின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தும் வகையில் தமிழக சட்டப் பேரவையின் இந்தச் சிறப்புக் கூட்டத்தில் முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் நான்கு அம்சங்கள் கொண்ட ஒரு ஆக்கபூர்வமான தீர்மானத்தை முன்மொழிந்ததற்காக முதலில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–25

இன்றைய நவீன அறிவியல் யுகத்தில்கூட வீணாகக் கடலில் போய்ச் சேரும் 1500 டி.எம்.சி. தண்ணீரை மக்கள் பயன்பாட்டிற்காக நாம் முற்றிலும் பயன்படுத்த முடியவில்லை. ஆனால், இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு, சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் 1789–ல் இராமநாதபுரத்தின் முத்துராமலிங்க சேதுபதி மன்னரின் உத்தரவின்பேரில் அவரது தலைமை அமைச்சராக இருந்த முத்து





இருளப்ப பிள்ளை, அரபிக் கடலில் வீணாகக் கலக்கும் ஆற்று நீரைத் தடுத்து நிறுத்தி பாசனத்திற்காக பயன்படுத்துவது குறித்து ஆய்வுகளை செய்து திட்டங்களை வடிவமைத்தார். ஆனால், பொருளாதாரப் பிரச்சினையின் காரணமாக அதற்கு செயல்வடிவம் கொடுக்க இயலவில்லை. பின்னர் ஆங்கிலேய இராணுவப் பொறியாளர் கர்னல் ஜான் பென்னிகுயிக் இதற்கு செயல்வடிவம் கொடுத்திருக்கிறார். தமிழகத்தில், சிவகிரியில் தொடங்கி முல்லை ஆற்றுடன் இணைந்து, பிறகு பெரியாறாக கேரளாவிலே பெருக்கெடுத்து, அரபிக் கடலில் வீணாகக் கலக்கும் தண்ணீரை, வறட்சியின் காரணமாக வாடி நிற்கும் தென் தமிழகத்திற்குப் பயன் தரும் வகையில் முல்லைப் பெரியாறு அணையை, தனது மனைவியின் நகைகளைக்கூட விற்று பென்னிகுயிக் கட்டி முடித்தார். முல்லைப் பெரியாறு அணையைக் கட்டும் பணியில் ஈடுபட்ட 483 தொழிலாளர்கள் மர்மக் காய்ச்சலுக்கு பலியானார்கள். மிகுந்த சிரமங்களுக்கு இடையிலே கட்டப்பட்ட இந்த அணையை உலகமே வியப்பாகப் பார்த்தது. "This is one of the most extraordinary feats of engineering ever performed by man"––மனிதனால் நிறைவேற்றப்பட்ட அசாதாரணமான பொறியியல் சாதனைகளில் முல்லைப் பெரியாறு அணையும் ஒன்று என்று The Institution of Royal Engineers நிறுவனம் வெளியிட்டுள்ள The Military Engineer in India Vol II–ல் லெப்டினென்ட் கர்னல் சான்டஸ் குறிப்பிட்டுள்ளார். ரூ.84.71 இலட்சம் மூலதனச் செலவுடன் 116 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இந்த பலம்வாய்ந்த அணையை ரூ.40 கோடி செலவில் இடிப்போம் என்று கேரள அரசு கூறி வருவது இந்திய ஒருமைப்பாட்டிற்கு வைக்கப்படும் பேரிடியாகும்.

முல்லைப் பெரியாறு அணையை இடித்துவிட்டு புதிய அணையைக் கட்டி தமிழகத்திற்குத் தேவையான தண்ணீரைத் தருவோம் என்று கேரள அரசின் சார்பில் தெரிவிக்கப்படும் கருத்து ஓர் ஏமாற்று வித்தையாகும். முல்லைப் பெரியாறு அணை, பெரியாறு ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்ட ஒரு தடுப்புச் சுவரே ஆகும். இதிலிருந்து தேக்கடி மதகு வாயிலாக, சுரங்கப்பாதை வாயிலாக தமிழகத்திற்குத் தண்ணீர் அனுப்பி வைக்கப்படுகிறது. முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டம் 104 அடிக்கு மேலே சென்றால்தான் அணையிலிருந்து தமிழகத்திற்குத் தண்ணீர் கிடைக்கும். புதிதாக கட்டப்போவதாக சொல்லப்படும் அணை, பெரியாறு அணையிலிருந்து 350 மீட்டர் கீழே அமையப்

போகின்றது. புதிய அணையின் மட்டம் பெரியாறு அணையைவிட 50 அடி குறைவு. எனவே, புதிய அணையில் தண்ணீர் மட்டம் 150 அடிக்கு மேலே சென்றால்தான் தமிழகத்திற்குத் தண்ணீர் எடுக்க இயலும். ஆனால், அதற்கு வழியே இல்லை. ஏனெனில் அவர்கள் கட்டப் போவதாக சொல்லும் அணையின் உயரமே 140 அடிதான். ஆனால், இந்தப் புதிய அணையைக் கட்டுவதற்கான உத்தரவு ஏதும் உச்ச நீதிமன்றம் பிறப்பிக்காத சூழ்நிலையிலே, சில ஆண்டுகளுக்கு முன்னால், புதிய அணையைக் கட்டுவதாக சொல்லப்பட்ட பகுதி ஒரு பாதுகாக்கப்பட்ட வனப் பகுதி. அங்கே ஒரு மரத்தைக்கூட வெட்டக்கூடாது. மத்திய அரசாங்கத்தினுடைய சுற்றுச்சூழல் இலாகாவின்கீழே இருக்கக்கூடிய ஒரு பகுதி. ஆனால், கேரள அரசு எல்லாவற்றையும் மீறி அங்கே புதிய அணையைக் கட்டுவதற்கான feasibility study–ஐ, பூர்வாங்க ஆய்வுகளையெல்லாம், மரங்களை வெட்டி மண்ணைப் பாழ்படுத்தி செய்திருப்பதையும், அதை மத்திய அரசு கண்டிக்காததையும் இங்கே வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

தமிழகத்திற்கு புதிய அணையிலிருந்து தண்ணீர் தருவோம் என்று கேரளா சொல்வது ஒரு ஏமாற்று வித்தை என்று சொன்னேன். அதற்கு ஆதாரமாகவே கேரள அரசாங்கமே நீதி அரசர் ஆனந்த் அவர்கள் குழுவிடம், இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு மனுவை அளித்திருக்கின்றார்கள். அந்த மனுவினுடைய 37 ஆம் பக்கத்திலே, “முல்லைப் பெரியாறு கேரளாவிற்கு மட்டுமே சொந்தமானது ஆகும்; இரு மாநிலங்களுக்கும் இடையே ஓடும் ஆறு அல்ல; எனவே, அந்த ஆற்று நீரில் தமிழகம் உரிமை கோர முடியாது” என்றும், அதே அறிக்கையின் 23–வது பக்கத்தில் “தமிழகத்திற்குத் தண்ணீர் தருவது என்பது கிடைக்கும் நீரின் அளவைப் பொறுத்தது ஆகும்” என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

இப்படி தொடர்ச்சியாக குமரி மாவட்டத்தில் நெய்யாறு இடதுகரை சானலில் நமக்கு உரிமையுள்ள தண்ணீரைத் தர மறுக்கும் கேரளம், நெல்லை மாவட்டத்தில் செண்பகவல்லி தடுப்பணை உடைப்பை சரிசெய்ய அனுமதி மறுக்கும் கேரளம், கொங்கு சீமையில் பாம்பாற்றின் குறுக்கே அணை கட்டத் துடிக்கும் கேரளம், நல்லாறு இடமலை ஆறு பிரச்சினையில் வஞ்சகம் செய்யும் கேரளம், முல்லைப் பெரியாறு அணையை



உடைக்கும் நாச காரியத்தில் ஈடுபடாமல் தடுக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து இருக்கின்றோம் என்பதை நிலைநாட்டக்கூடிய வகையிலே இன்று நிறைவேற்றப்படவிருக்கக்கூடிய தீர்மானம் அமைந்திருக்கிறது.

பிற்பகல் 12–30

கர்னல் பென்னிகுயிக் கட்டிய முல்லைப் பெரியாறு அணை உடைந்துவிடும்; இதனால் கேரளாவில் வாழும் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று கேரள அரசு அம்மாநில மக்களிடையே பீதியைக் கிளப்பி வருகின்றது. எனக்கு முன்னர் உரையாற்றிய இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, எழுத்தறிவில் இந்தியாவில் முதன்மையாக இருக்கும் கேரளாவைச் சேர்ந்த மக்கள், இந்த வதந்தியை நம்பி வருவது துரதிருஷ்டவசமானதாகும்.

ஒரு கட்டடம் அல்லது அணை பலமாக இருக்கிறதா என்பதை அறிவியல் ரீதியாகத்தான் சோதனை செய்து ஒரு முடிவைத் தரமுடியும். இந்த நேரத்திலே தமிழக பொதுப் பணித் துறையினுடைய முன்னாள் பொறியாளர்கள் முல்லைப் பெரியாறு அணை தொடர்பாக ஒரு சிறப்பான ஆவண வீடியோ படத்தை தயாரித்திருக்கிறார்கள். முல்லைப் பெரியாறு அணை முற்றிலுமாக இடியாது, கற்பனையாக இடிந்து போவதாக வைத்துக்கொண்டாலும் அந்த அணையின் முழுநீரும் மதகு வழியாக இடுக்கி அணைக்குத்தான் வருமே தவிர கேரளாவில் உள்ள மூன்று மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு எந்தவிதமான சேதாரமும் ஏற்படாது என்று அறிவியல் ரீதியாக நிரூபித்திருக்கின்றார்கள்.

இதில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். என்னவென்றால், இந்த ஆவணப் படத்திலே நம்முடைய தமிழக பொதுப் பணித் துறையினுடைய முன்னாள் பொறியாளர்கள் சொல்லியிருக்கக்கூடிய கருத்தை கேரள மாநிலத்தினுடைய பேரிடர் மேலாண்மைத் துறையினுடைய செயலாளர், எல்லோருக்கும் பிரபலமாக கேரளா உயர் நீதிமன்றத்திலே அதனுடைய அட்வகேட் ஜெனரல் தண்டபாணி அவர்கள் சொன்ன கருத்துதான் வெளியே தெரிந்திருக்கின்றது–அதே வழக்கில் கேரள மாநிலத்தினுடைய பேரிடர் மேலாண்மைத் துறையினுடைய செயலாளர் ஒரு

கருத்தைச் சொல்கின்றார். அவர் சொல்கின்றார், முல்லைப் பெரியாறு அணை உடைந்தால் அதிலிருந்து வெளியேறும் வெள்ளம் இடுக்கி அணையைச் சென்றடைய 4 மணி நேரமும், செறுதோணி அணைமூலம் அரபிக் கடலைச் சென்றடைய 10 முதல் 12 மணி நேரமும் பிடிக்கும். எனவே, மக்களுக்கு எத்தகைய அபாயமும் ஏற்படாது என்று குறிப்பிட்டிருக்கின்றார். இந்த சூழலிலே மிகப் பெரிய ஒரு பீதியை கேரள அரசாங்கம் பரப்பி வரக்கூடிய சூழ்நிலையிலே அதற்கான ஒரு திரைப்படமும் 'டேம் 999' என்ற பெயரிலே வந்திருக்கக்கூடிய நிலையிலே தமிழக அரசுக்கு என்னுடைய கோரிக்கை என்னவென்றால், நம்முடைய தமிழ்நாடு அரசு தமிழக பொதுப் பணித் துறையினுடைய முன்னாள் பொறியாளர்கள் தயாரித்திருக்கக்கூடிய இந்த வீடியோ படம் தமிழிலே வந்திருக்கின்றது, ஆங்கிலத்திலே சப் டைட்டில் போட்டிருக்கின்றார்கள். அதை முழுமையாக அல்லது அதைவிட இன்னும் மெருகூட்டி சிறப்பான ஒரு ஆவணப் படத்தை ஆங்கிலத்திலே தயாரித்து, நம்முடைய உரிமை நியாயமானது என்பதை இந்திய மக்களை உணர வைப்பதற்கான பணிகளை நாம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

கேரள மாநிலத்தைச் சேர்ந்த முன்னாள் நதி நீர் ஆணையத்தின் தலைவர் முனைவர் கே.சி. தாமஸ் அவர்கள் டிசம்பர் 13–ல் வெளியான Deccan Chronicle நாளிதழிலே தொழில்நுட்பம் வளர்ந்திராத காலத்தில், 1895–இல் கட்டப்பட்ட முல்லைப் பெரியாறு அணை, 2011–லும் உறுதியாக நின்று கொண்டிருப்பதும், அதன் வடிவமைப்பும், கட்டுமான நுட்பமும் வலுவானதாகவும், சிறப்பானதாகவும் இருப்பதற்கு அத்தாட்சியாகும் என்று குறிப்பிட்டிருப்பதோடு அணையை பலப்படுத்தக்கூடிய முயற்சிகள் நவீன கால தரத்திற்கு அந்த அணையை உயர்த்தியுள்ளது. எல்லா வகையான சூழ்நிலைகளையும் எதிர்கொள்ளும் அளவிற்கு முல்லைப் பெரியாறு அணை பலமானதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

கேரள அரசாங்கத்தினுடைய நடவடிக்கை, இந்திய ஒருமைப்பாட்டிற்கு உலை வைக்கும் கொடிய அரசாக கேரளா விளங்குகிறது என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. ஏறத்தாழ 10 இலட்சம் தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அழித்து, தமிழகத்தில் 2,17,000 ஏக்கர் நிலங்கள் பாசனத்திற்குத் தண்ணீர்



கிடைக்காமலும், 85 இலட்சம் மக்கள் குடிநீருக்கு வழியில்லாமல் அல்லல்படக்கூடிய ஒரு வேலையைத்தான் கேரள அரசு செய்து வருகிறது. இதே நிலை தொடர்ந்து நீடித்தால் தமிழகத்தின் தென் பகுதி காலப்போக்கில் பாலைவனமாக மாற நேரிடும். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை மனிதநேய மக்கள் கட்சி முழுமையாக வரவேற்பதுடன், ஒரே ஒரு கோரிக்கையை நான் இங்கே வைக்க விரும்புகின்றேன்.

மத்திய அரசு, மீனவர் பிரச்சினையிலே சரியான அணுகுமுறையை மேற்கொள்ளாமல், தமிழக மீனவர்களுடைய நலனைக் காப்பாற்றுவதிலே அக்கறை இல்லாமல் இருப்பதுபோல் இந்தப் பிரச்சினையில் இருக்கக்கூடாது. இப்போதுகூட இராமேஸ்வரத்தை சேர்ந்த 5 மீனவர்கள்மீது பொய் வழக்குப் போடப்பட்டு, இலங்கைச் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை மீட்பதற்கான உருப்படியான வழியைச் செய்யாததுபோலத்தான் இப்போது இந்த முல்லைப் பெரியாறு விஷயத்திலும் மத்திய அரசு இருக்கின்றது. எனவே, சட்டசபையில் உள்ள கட்சிகள் மட்டுமல்லாமல், சட்டப் பேரவைக்கு வெளியில் இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய ஒரு குழு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே டெல்லிக்கு சென்று, நம்முடைய கோரிக்கைகளை பிரதமர் அவர்களிடம் எடுத்துரைக்க வேண்டும். அதற்கும் வழிவகுக்க வேண்டுமென்று சொல்லி இந்தத் தீர்மானத்தை முழுமையாக வரவேற்று அமர்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணை உரிமையில் தமிழ்நாடு தனக்குள்ள உரிமையை எந்தச் சூழ்நிலையிலும் விட்டுக்கொடுக்காது என்று தமிழ்நாடு முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக மனதார வரவேற்கிறோம். அணைகளும், ஆலைகளும்தான் உண்மையான கோயில்கள் என்று இந்தியாவினுடைய முதல் பிரதமர் ஆசிய ஜோதி என்று வர்ணிக்கப்பட்ட நேரு அவர்களால் அந்த அருமையான கருத்து வலியுறுத்தப்பட்டது. சுதந்திரத்திற்கு முன்னும், பல நூறாண்டுகள்,

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2011 டிசம்பர் 15

பல ஆயிரமாண்டுகள் காலத்திற்கு முன்பு கட்டப்பட்ட அணைக்கட்டுகள், நீர்த் தேக்கங்கள் எல்லாமே இந்தியாவில் வலுவோடு இருக்கின்றன. சுதந்திரத்திற்கு முன்பு அல்லது இப்பொழுது கட்டப்பட்ட எந்த அணையும் உடைபட்டுவிட்டதாக எந்தவிதமான ஆதாரங்களும் இல்லாதபொழுது, ஏறக்குறைய 150 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட முல்லைப் பெரியாறு அணை மட்டும் உடைந்துவிடும் என்று ஏறக்குறைய 30 ஆண்டு காலமாக திட்டமிட்டு கேரளாவில் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.

*பிற்பகல் 12–35*

மனித நேயர் பென்னிகுயிக் அவர்கள் தன்னுடைய குடும்பச் சொத்துகளையெல்லாம் விற்று முல்லைப் பெரியாறு அணையைக் கட்டினார். அப்பொழுது தேனி, திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களெல்லாம் வளமடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு அந்த அணை கட்டப்பட்டாலும்கூட, அந்த அணையினுடைய உயரம் 152 அடிக்கு உயர்த்தப்படாததனுடைய விளைவாக இன்றும் இராமநாதபுரம் மாவட்டம், பெரியாறு அணையின்மூலம் பலன்பெற இயலவில்லை. இப்படிப்பட்ட சூழலில் அந்த அணையினுடைய உயரத்தை 120 அடியாக குறைக்க வேண்டுமென்று கேரளாவிலே திட்டமிட்டு அனைத்து கட்சிகளுமே ஒருமுகமாக பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இது எந்த விதத்திலே நியாயம் என்று தெரியவில்லை. இது எங்களைப் பொறுத்தமட்டில், நாங்கள் என்ன கருதுகிறோம் என்று சொன்னால், ஒரு மாநில எல்லையைப் பிரிக்கின்றபொழுது, அந்த மாநிலம் வளமோடு இருக்க வேண்டுமென்று சொன்னால், குறிப்பாக இயற்கை வளங்கள் கணக்கிலே கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அந்த அடிப்படையிலே மேற்குத் தொடர்ச்சி மலையை உள்ளடக்கிய பல பகுதிகள் தமிழ்நாட்டோடு இணைக்கப்பட்டிருக்க வேண்டும். 1956 ஆம் ஆண்டு மாநில எல்லைகள் வகுக்கப்பட்டபோது நாம் ஏமாந்துவிட்டோம். தேவிகுளம், பீர்மேடு, தமிழகத்தோடு இணைக்கப்பட்டிருப்பின் இன்று முல்லைப் பெரியாறு பிரச்சினை எழுந்திருக்க வாய்ப்பேயில்லை. இதனுடைய விளைவாகத்தான் பரம்பிக்குளம் ஆழியாறு, வீராறு போன்ற அணைகள் பிரச்சினைகளெல்லாம் அவ்வப்போது எழுப்பப்பட்டு வருகின்றன.



2011 டிசம்பர் 15] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

எனவே, நம்முடைய இந்த மன்றத்திலே இன்று அதற்கு வாய்ப்பு இருக்குமா இல்லையா என்று தெரியவில்லை. இருந்தாலும்கூட, நாங்கள் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக முன் வைக்க விரும்புவது என்னவென்றால், தமிழகத்தினுடைய ஒட்டுமொத்தமான எல்லைகளிலே, அது குடகிலேயிருந்து காவிரி உற்பத்தியானாலும் சரி, தென்பெண்ணையாறு பிரச்சினையானாலும் சரி, இந்த எல்லைகளிலே இருக்கக்கூடிய நதிகளில் தாமிரபரணியைத் தவிர, ஒரு நதிகூட தமிழகத்தினுடைய எல்லைக்குட்பட்டு உற்பத்தியாகாத வகையில் தமிழகத்தின் எல்லை பிரிக்கப்படுகின்றபோது பாதகம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்த எல்லை மறுசீரமைப்பை மீண்டும் ஒருமுறை அமைப்பதற்கு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். அப்பொழுதுதான் ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டின் இந்தப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு வரும் என்று நாங்கள் புதிய தமிழகம் கட்சியின் சார்பாகக் கருதுகிறோம்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் தமிழ்நாடு அரசு இரண்டு மாநில மக்களிடையே மோதல் வந்துவிடக்கூடாது என்ற அடிப்படையில் இந்தப் பிரச்சினையை மிகவும் மெதுவாக, மிகவும் அமைதியான முறையிலே அணுகி வருகிறது என்பதற்காக நாங்கள் பாராட்டுகிறோம். எனினும்கூட இந்தப் பிரச்சினையிலே நாம் இன்னும் விரைந்து செயல்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். சகோதரர் ஜவாஹிருல்லா அவர்கள் சொன்னதுபோல எப்படி கேரளாவில் அனைத்துக் கட்சிகளுடைய பிரதிநிதிகளை அழைத்துச் சென்று பிரதமர் அவர்களைச் சந்தித்தார்களோ, அதேபோல நாமும் பிரதமர் அவர்களைச் சந்திக்க வேண்டும். அதன்மூலமாக தமிழக மக்கள் ஒற்றுமையாக இருக்கிறோம், ஒற்றுமையாக இருப்போம் என்பதை வலியுறுத்த வேண்டும். அதேபோல அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து ஒரு நாள் வேலை நிறுத்தத்தைக்கூட நடத்த வேண்டும்.

கேரள அரசு தொடர்ந்து தவறு செய்து வருகிறது. உச்ச நீதிமன்றம் கொடுத்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாத ஒரு மாநிலம் இருக்கின்றபோது அது எப்படி ஒரு இந்திய அரசியல் சாசனத்திற்கு உட்பட்ட அரசாக இருக்க முடியும்? எனவே, 2006 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் 142 அடிவரை தமிழ்நாடு அரசு உயர்த்திக்கொள்ளலாம் என்று சொன்ன பிறகு, கேரள அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறது என்று சொன்னால், அது இந்திய

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2011 டிசம்பர் 15

அரசியல் சாசனத்திற்கு உட்பட்ட அரசாக இருக்க வாய்ப்பு கிடையாது. அப்படி கேரள அரசு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும் மீறுகின்றபோது, அந்த அரசுகூட கலைக்கப்பட்டு, அது மத்திய அரசினுடைய நேரடிப் பார்வையிலே வரவேண்டுமென்பதுதான் நாங்கள் வைக்கக்கூடிய ஒரு கோரிக்கையாகும். எனவே, ஒட்டுமொத்தத்தில் இரண்டு மாநில மக்கள் மத்தியிலே மோதல் இல்லாமல் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும். மாநில அரசு இன்று எடுத்திருக்கக்கூடிய இதே நிலையில் பேச்சுவார்த்தையைத் தவிர்க்கக்கூடாது. பேச்சுவார்த்தைகளுக்கும் பலன் இருக்கும். கேரளத்தினுடைய நோக்கம் தண்ணீர் கொடுக்கக்கூடாது என்பது ஒன்றாக இருந்தாலும்கூட, அவர்களுக்கு வேறு ஏதோ ஒரு நோக்கம் இருக்கிறது. அவர்கள் தண்ணீருக்கு விலை பேசுவதைப்போலத் தெரிகிறது. அதில் உண்மைதான் என்ன? கேரள அணை பலமாக இல்லையென்று சொன்னால், நாம் கட்டியது பலமாக இல்லையென்று சொன்னால், நாம் பணத்தை அவர்களிடத்திலே கொடுப்போம் அவர்களாவது கட்டட்டும். எனவே, அதற்கும் வாய்ப்பிருக்கிறதா என்று பார்க்கலாம். அவர்களுடைய கூற்றிலே அணையை பலப்படுத்த வேண்டுமென்பது அல்ல. அந்த அணை முழுக்க முழுக்க கேரளாவினுடைய கட்டுப்பாட்டிலே வரவேண்டும். எனவே, அந்த அணை உடைக்கப்பட வேண்டும், மாற்று அணை கட்டப்பட வேண்டுமென்கிற சுயநலப் போக்குதான் இருக்கிறது. எனவே, அதற்கு அனுமதிக்க இயலாது, நம்முடைய உரிமையை விட்டுக்கொடுக்க இயலாது, மத்திய அரசைப் பொறுத்தமட்டிலும் இதிலே மவுனம் சாதிப்பது ஏன் என்று தெரியவில்லை. இது, இரு மாநிலங்களுடைய பிரச்சினையல்ல, ஒட்டுமொத்த இந்திய மக்களுடைய பிரச்சினை என்கின்ற அடிப்படையிலே பிரதமர் அவர்களும் இதிலே நேரடியாகத் தலையிட வேண்டும். எனவே, அதை வலியுறுத்தக்கூடிய வகையிலே அனைத்துக் கட்சிகளும் பிரதமரை விரைவிலே சந்திப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் கேட்டுக்கொள்கிறேன்.

முல்லைப் பெரியாறு பிரச்சினையிலே புதிய தமிழகம் கட்சி, தமிழக அரசு எடுக்கக்கூடிய அனைத்துவிதமான நடவடிக்கைகளுக்கும் உற்ற துணையாக விளங்கும் என்று கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.



2011 டிசம்பர் 15]

பிற்பகல் 12–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற தீர்மானத்தை சமத்துவ மக்கள் கட்சி முழுமையாக ஆதரித்து வரவேற்கிறது.

1963 ஆம் ஆண்டு ஒரு பத்திரிகைச் செய்தி மூலமாக இந்த அணை பலவீனம் அடைந்து இருக்கிறது என்று சொன்னது முதல், பல சர்ச்சைகளுக்கு உள்ளாகி, பல வழக்குகளைச் சந்தித்து இன்று நாம் நம்முடைய உரிமைக்காகப் போராடுகின்ற சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை அனைவரும் அறிவோம்.

கேரள அரசு, இப்பிரச்சினையை முன்வைப்பதற்கு ஒரு முக்கிய காரணமாக இருப்பது, அந்த அணை பலவீனமாகிவிட்டது, எனவே உடனடியாக மாற்று இடத்தில் புதிய அணையைக் கட்டவேண்டுமென்று சொல்வதற்குக் காரணமாக, சீனாவில் இருக்கின்ற “Ru” ஆற்றின் மீதுள்ள “Banquio Dam” உடைந்ததையும் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மாமன்றத்தில் ஒன்றைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏப்ரல் 1951 ஆம் ஆண்டு அந்த அணை கட்டப்பட்டது. அந்த அணை உடைந்தது 1975 ஆம் ஆண்டு. ஒரு வருடத்திற்கு விழுகின்ற மழை அளவு 1,000 மில்லி மீட்டர் என்றால், ஒரே நாளிலே 1,660 மில்லி மீட்டர் அளவு மழை பெய்து அதிக நீர் வந்ததன் காரணமாகத்தான் அது உடைந்தது. அதுமட்டுமல்லாமல், செய்தித் தொடர்போ, வேறு எந்த ஒரு தொடர்போ விரிவாக்கப்படாத சூழ்நிலையில், Technological development இல்லாத சூழ்நிலையில், அந்த அணையின் நிலையை உடனடியாக மக்களுக்கு எச்சரிக்கை செய்ய முடியாத சூழ்நிலையில்தான் அந்த அணை உடைந்ததே ஒழிய வேறு எந்தக் காரணத்தினாலும் உடையவில்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அதுமட்டுமல்லாமல், உலகத்திலே இதுவரை பல நூற்றாண்டுகளிலே கட்டப்பட்ட எந்த ஓர் அணையும் நிலநடுக்கத்தால் உடையவில்லை என்பதையும் இங்கே

[திரு. ரா. சரத்குமார்] [2011 டிசம்பர் 15

சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். ஆகவே, அவர்கள் சொல்கின்ற நிலநடுக்கத்தால் முல்லைப் பெரியாறு அணை உடையாது என்பதைச் சுட்டிக்காட்டி, முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்ற அச்ச உணர்வை ஏற்படுத்தும் வகையில் அவதூறுகள் பரப்பப்படுவதன் அடிப்படையில் தமிழகம் தனக்குள்ள உரிமையை விட்டுக்கொடுக்காது என்று தீர்மானம் நிறைவேற்றும் விதமாக இன்று சிறப்பு சட்டமன்றப் பேரவைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, அதன்மூலமாக தமிழகம், மக்களின் உரிமைகளை விட்டுக்கொடுக்காது, மக்கள் நலன்களைக் காப்பதில் தான் ஒரு முன்னோடி என்று நிரூபித்திருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், கட்சி வேறுபாடுகளைக் களைந்து, இப்பிரச்சினையில் தமிழக மக்களின் உரிமைக்காக தங்களது ஒற்றுமை உணர்வை வெளிப்படுத்தும் விதமாக, இந்த சிறப்புப் பேரவைக் கூட்டத்தில் பங்கேற்று வரலாற்றுச் சிறப்புமிக்கதொரு தீர்மானத்தை நிறைவேற்றவிருக்கும் அனைத்துப் பேரவை உறுப்பினர்களுக்கும், எனது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த சிறப்பு சட்டமன்றப் பேரவைக் கூட்டம் கடந்த 9 ஆம் தேதி நடைபெற்ற கேரள சட்டசபையின் சிறப்புக் கூட்டத்திற்குப் போட்டியாக நடத்தப்படும் கூட்டம் என்று யாரும் கருதிவிட வேண்டாம். உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காததோடு, அணையின் பாதுகாப்பு குறித்து தவறான பிரச்சாரங்களைச் செய்து, புதியதாக ஓர் அணை கட்டியே தீருவோம் என்று கூறிவரும் கேரள அரசின் நியாயமற்ற நிலையை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும். மத்திய அரசும் தனது மெத்தனப் போக்கை கைவிட்டு உடனடியாக இப்பிரச்சினைக்கு சுமுக முடிவு எட்ட வழிவகை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தும் கவன ஈர்ப்புக் கூட்டமாகவே நான் கருதுகிறேன்.

இப்பிரச்சினையில் தமிழக மக்கள் உணர்ச்சிவசப்படாமல் அமைதி காக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து, நாம் வன்முறையிலும் வெறுப்பிலும் நம்பிக்கை அற்றவர்கள் என்பதை உலகத்திற்கு உணர்த்துவோம் என்ற அக்கறை உணர்வை வெளிப்படுத்தியிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் யதார்த்தமான, நியாயமான, உணர்வுப்பூர்வமான அணுகுமுறையை மனதாரப் பாராட்டுகிறேன்.



2011 டிசம்பர் 15] [திரு. ரா. சரத்குமார்]

அதுமட்டுமல்லாது, கடந்த 10–12–2011 அன்று நாளிதழ்கள் மூலமாக முல்லைப் பெரியாறு அணையின் மத்திய நீர் ஆணையத் தலைவரின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1980 முதல் 1994 வரை தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்ட அணையை வலுப்படுத்தும் பணிகளை விளக்கமாக தெரிவித்து, இன்றும் மாமன்றத்தில் தெரிவித்து, அந்த அணை மிகவும் பலமாக உள்ளது என்பதையும் பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்துள்ளது என்பதையும் சிறப்பாக எடுத்துக்கூறி, அப்பகுதியில் உள்ள மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் அச்சுறுத்தல் ஏதும் எள்ளளவும் இல்லை என்பதை உறுதிபட உணர்த்தியிருப்பதை வரவேற்கின்றேன்.

பிற்பகல் 12–45

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கும் இப்படிப்பட்ட சிறப்பான விளக்கத்திற்குப் பின்னும், அணை பாதுகாப்பற்றது, புதிய அணையை கட்டியே தீருவோம் என்று கேரள அரசு பிடிவாதத்துடன் பேசி வருவது, வேண்டுமென்றே பீதியை கிளப்பிவிட வேண்டும் என்பதற்குத்தான் என்பது தெள்ளத்தெளிவாகிறது.

இங்கு மற்ற உறுப்பினர்கள் சொன்னதுபோல, 1886–1895 ஆம் ஆண்டு “பென்னிகுயிக்” என்ற ஆங்கிலேய பொறியாளர் பொது மக்களின் நலன்களை மட்டுமே கருத்தில்கொண்டு, அணை கட்டும்போது ஏற்பட்ட நிதிப் பற்றாக்குறையைக்கூட, தனது சொத்துகளை விற்று, சொந்த செலவில் சரி செய்து, அணையைக் கட்டி முடித்து, அதை மக்களுக்காக அர்ப்பணித்தபோது அந்த அணையால் ஏற்படப்போகும் பயன்களை மட்டுமே எண்ணி செயல்பட்டிருப்பார். இந்த அணையைப் பிரச்சினையாக்கி, மனித உணர்வுகள் புண்படுத்தப்படுவதை அவர் கனவிலும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார் என்பது தெரிகிறது.

கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது கல்லணை; 1854 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட கோதாவரி அணை; 1855 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட கிருஷ்ணா அணை போன்ற முல்லைப் பெரியாறு அணைக்கு முன்பாக கட்டப்பட்ட அணைகள் எந்த அச்ச உணர்விற்கும் இடம் தராத நிலையில் வலுவாக இருந்து வருகின்றன. எனவே, முல்லைப் பெரியாறு அணை குறித்த தவறான செய்திகளை நம்பத் தேவையில்லை என்பதை இது தெளிவாக்குகிறது.

[திரு. ரா. சரத்குமார்] [2011 டிசம்பர் 15

27–2–2006 அன்று உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக கேரள அரசு, கேரள பாசன மற்றும் நீர் பாதுகாப்புச் சட்டத்திருத்த மசோதாவை நிறைவேற்றியது. கேரள அரசால் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டத்திருத்தம் அரசியல் சட்டத்திற்கு முரணானது, எதிரானது. இப்படி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மதிக்காமல், அணை உடைந்துவிடும் என்று உண்மைக்கு மாறான பிரச்சாரம் செய்வதன்மூலம் நீதிக்கு எதிராகவும், நியாயத்திற்குப் புறம்பாகவும் செயல்படும் கேரள அரசு சுமுகமாக, அமைதியாக இரு மாநிலங்களில் வாழ்ந்துவரும் தமிழர்களின், மலையாளிகளின் நல்லுறவை குலைக்காத வகையில் நடந்துகொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடுத்த வேண்டுகோளின்படி, தமிழக மக்கள் அனைவரும் உணர்ச்சிகளுக்கும், கொந்தளிப்புகளுக்கும் ஆளாகாமல் அமைதி காக்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்துகிறேன். புதிதாக கட்டப்படும் அணை இரு மாநிலங்களுக்கிடையே நிலவும் நல்லுறவையும், ஒற்றுமையையும், சகோதரத்துவத்தையும் பிரிக்கும் சுவராக அமைந்துவிடும். எனவே, புதிய அணை தேவையில்லை என்பதை இப்பேரவைக் கூட்டத்தின்மூலம் தெளிவுபடுத்துவோம். முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் தமிழக மக்களின் நலன்களையும், உரிமைகளையும் காப்பதற்கு குரல் கொடுத்து செயல்பட்டுவரும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நாம் உறுதியோடும், உணர்வோடும் பக்கபலமாக இருந்து செயல்படுவோம் என்று உறுதியளிப்போம் என்று கூறி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்று முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதற்கு ஏதுவாக 2006 ஆம் ஆண்டு கேரள அரசின் பாசனம் மற்றும் நீர் பாதுகாப்புத் திருத்தச் சட்டத்தில் உரிய திருத்தங்களை கேரள அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும், அணையின் நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்தி, எஞ்சியுள்ள நீண்டகால அணைப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள கேரள அரசு தமிழகத்திற்குத் தடை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டுமென்றும், எந்தச் சூழ்நிலையிலும் தமிழ்நாடு தனக்குள்ள உரிமையை விட்டுக்கொடுக்காது என்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் கொண்டு வந்திருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.



2011 டிசம்பர் 15]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், முல்லைப் பெரியாறு அணை குறித்து, நமது உரிமை குறித்து, இன்றையதினம் கொண்டுவந்திருக்கின்ற தீர்மானத்தை அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி முழுமையாக ஆதரிக்கிறது என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

முல்லைப் பெரியாறு அணை, தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களினுடைய ஜீவாதார உரிமையில் இருக்கின்ற ஒரு முக்கியமான அம்சமாகும். கிட்டத்தட்ட 85 இலட்சம் பேர் அந்தப் பகுதியில் வாழ்கின்றார்கள். கிட்டத்தட்ட 2 இலட்சத்து 25 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் இருக்கின்றது. விவசாயத்திற்கு மட்டுமல்லாது, முல்லைப் பெரியாறு அணை அந்தப் பகுதி மக்களுடைய குடிநீர் தேவைக்கு இன்றையதினம் ஆதாரமாக இருக்கிறது.

மரியாதைக்குரிய ஆங்கிலேய பொறியாளர் “பென்னிகுயிக்” அவர்களால் மிக பிரம்மாண்டமாகக் கட்டப்பட்ட இந்த அணையை கேரள அரசு வேண்டுமென்றே உடைக்க நினைக்கிறது. அதாவது கல்லணை கட்டி ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டது. பெரியாறு அணை கட்டி 120 ஆண்டுகள்தான் ஆகின்றன. அதைக் கேள்வி கேட்கின்ற நிலையில் கேரள அரசு முந்திக் கொண்டு செயல்படுகிறது. 999 ஆண்டுகள் நமக்கு குத்தகை ஒப்பந்தம் இருந்தும்கூட, 120 ஆண்டுகளில் நமது உரிமையைப் பறிக்கப் பார்ப்பது எப்படி நியாயம் என்று அவர்களே சிந்திக்க வேண்டும். படித்தவர்கள் அதிகமாக வாழ்கின்ற கேரளப் பகுதியில் இதுபோன்ற நிலை வரக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கேரள அரசும் இந்தப் பிரச்சினையை இந்த நேரத்தில் ஏன் இவ்வளவு பெரிதாக ஆக்குகிறது? காங்கிரஸ் கட்சி ஆளுகிறது; 69 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; 68 இடதுசாரி சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; இப்பொழுது ஒரே ஒரு தொகுதிக்கு இடைத் தேர்தல் வருகிறது. இந்த இடைத் தேர்தலில் எப்படி மக்கள் மனதில் இடம் பிடிப்பது என்பதற்காக, அங்கிருக்கின்ற கேரள மக்களை திசை திருப்புகின்ற அரசியல் கட்சிகள் இந்த நேரத்தில் வன்மையாகக் கண்டிக்கப்பட

[திரு. பி.வி. கதிரவன்] [2011 டிசம்பர் 15

வேண்டும். ஏனென்றால், நாளைக்கு அவர்களது அரசு இருக்குமா, இருக்காதா என்ற நிலையை மட்டுமே சிந்திக்கின்ற ஒரு அவல நிலை கேரள அரசிடம் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12–50*

அங்கிருக்கின்ற கேரள அதிகாரிகள் மற்றும் ஒரு சில கேரள அமைச்சர்கள் பேசுகின்ற பேச்சு, அமைதியாக இருக்கின்ற கேரள மக்களிடம் வன்முறையைத் தூண்டுகின்ற அளவுக்கு இருக்கிறது. கேரள அதிகாரிகளும் அதேபோன்று செயல்பட ஆரம்பிக்கிறார்கள். இவ்வளவு நிலை வந்தாலும்கூட, தமிழக அரசு உண்மையிலேயே ஜனநாயகரீதியாக, இந்திய இறையாண்மைக்குப் பழுது ஏற்பட்டுவிடக்கூடாது என்ற ஒரு நல்ல சிந்தனையோடு, அவர்களது உரிமையைப் பாதுகாக்கின்றவகையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றையதினம் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

தமிழர்கள் எங்கேயாவது, யாராவது தமிழகத்தில் இருக்கிற கேரள மக்களைத் தாக்கினார்கள் என்று எந்தப் பத்திரிகையிலும் செய்தி வரவில்லை. அதேநேரத்தில், தமிழகத்திலிருந்தும், அடுத்த மாநிலங்களிலிருந்தும் அங்கே ஐயப்ப பக்தர்கள் செல்கிறார்கள். அவர்கள் தாக்கப்படுகிறார்கள்; அவர்களுடைய வண்டிகள் உடைக்கப்படுகின்றன. மூணாறு பகுதியிலிருக்கின்ற தமிழர்கள் தோட்டத் தொழில் செய்ய முடியவில்லை. அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை இருக்கிறது. அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில், கேரளாவில் இருக்கின்ற தமிழக மக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கின்ற வகையிலே, இதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, தமிழகத்தில் தேனி, போடி, சின்னமனூர், கம்பம், போளூர் பகுதிகளிலே பாதிக்கப்படுகின்ற மக்கள் இருக்கின்றார்கள். ஒவ்வொருநாளும், தமிழக அரசுக்கும், கேரள அரசுக்கும் அவர்களுடைய உணர்வுகளைத் தெரிவிக்கின்ற வகையில்தான் அவர்கள் நடைபயணம் செல்கிறார்கள். தமிழக அரசு அதை புத்திசாலித்தனமாக சமாளித்துக் கொண்டிருக்கிறது. அந்த உணர்வுகளைக் காட்டுகின்ற வகையிலேதான் அவர்கள்



2011 டிசம்பர் 15] [திரு. பி.வி. கதிரவன்]

செயல்படுகிறார்கள். கேரள அரசுக்கு அந்த மக்களுடைய உண்மை நிலையைத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சூழ்நிலை இருக்கிறதே தவிர, தமிழக மக்களையோ, கேரள மக்களையோ துன்புறுத்த வேண்டுமென்ற சிந்தனை இல்லை. அந்த அடிப்படையைக் காட்ட வேண்டியது அவர்களது கடமை, ஜீவாதார உரிமை. தண்ணீர் இல்லையென்று சொன்னால், நாளைக்கு அந்தப் பகுதிகளிலே அவர்கள் வாழவே முடியாது என்ற நிலை இருக்கிறது. அதனால்தான் அந்தப் பகுதி மக்கள் இப்படிச் செய்து வருகிறார்கள்.

இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பில் முழுமையாக வரவேற்று, நன்றி சொல்லி, வாழ்த்துச் சொல்லி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளத்தில் ஆளும் உம்மன்சாண்டியின் காங்கிரஸ் அரசும், எதிர்க்கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும் இணைந்து நம் தமிழ்நாட்டுக்கான முல்லைப் பெரியாறு ஆற்றுநீருக்கான சட்டபூர்வமான உரிமையை இழக்கும் வகையில், அணையை உடைப்பது என்கின்ற முடிவை, கேரள சட்டமன்றத்திலேயே தீர்மானமாக நிறைவேற்றியுள்ளனர். இவர்கள் அணையை மட்டும் உடைக்க முயற்சிக்கவில்லை. இரு மாநில மக்களின் சகோதர உணர்வையும், ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உடைக்க முயன்றுள்ளார்கள். இது தமிழ்நாட்டிலுள்ள ஏழு கோடி தமிழர்களையும் அதிர்ச்சிக்கும், வேதனைக்கும் உள்ளாக்கியிருக்கிறது. என்றாலும் அவர்கள் அணையை உடைத்துவிட முடியாது. ஏனென்றால், தமிழ்நாட்டின் ஆட்சித் துறைத் தலைவராய், ஏழு கோடி தமிழ் மக்களின் நெஞ்சம் நிறைந்த நம் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பிலே இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டுக்குப் பாதிப்பு வந்தபொழுது உரிமையைப் பாதுகாத்து, சமூக நீதி காத்த வீராங்கனை என்ற பாராட்டையும், பட்டத்தையும் (மேசையைத் தட்டும் ஒலி) கருப்பு சட்டைத் தலைவரிடமே பெற்றுள்ளார்கள். காவிரி ஆற்று நீரின் உரிமையைப் பாதுகாத்துள்ளார்கள்; இலங்கைத்

[திரு. உ. தனியரசு] [2011 டிசம்பர் 15

தமிழ் மக்களை இனப் படுகொலை செய்த இராஜபக்சேவைப் போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் எனவும், (மேசையைத் தட்டும் ஒலி) இலங்கைமீது பொருளாதாரத் தடை கொண்டுவர வேண்டுமென்கின்ற வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானத்தையும் நிறைவேற்றி, உலகத் தமிழர்களினுடைய மாண்பை உயர்த்தினார்கள். பேரறிவாளன், சாந்தன், முருகன் உயிர்காக்க தீர்மானம் நிறைவேற்றினார்கள். இப்படி வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானங்களை பேராண்மையோடு செயலாற்றி நிறைவு செய்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டினுடைய, தமிழர்களினுடைய உரிமைகளுக்கு ஆபத்து வருகின்றபோது அவர்கள் எப்போதுமே தோற்றதில்லை, வெற்றிமேல் வெற்றியைத் தொடர்ந்து பெற்று வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–55*

இப்போதும் முல்லைப் பெரியாறு அணையைப் பாதுகாத்து, தமிழ்நாட்டு மக்களின் உரிமையை மீட்டெடுப்பார், வெற்றி பெறுவார். அதற்காக தமிழ்நாட்டின் 7 கோடி தமிழர்களும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கரம் பற்றி வழி நடப்போம், உரிமை காப்போம் என்கின்ற வலுவான கருத்தை தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவையின் சார்பாகப் பதிவு செய்து, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கின்றேன்.

மீண்டும் என்னுடைய ஆலோசனையை, என்னுடைய கருத்தை, எங்களுடைய இயக்கத்தினுடைய கருத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். கேரள அரசு சட்டபூர்வமாக உருவாக்கப் பட்டிருக்கின்றது என்கின்ற வாசகத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய தீர்மானத்திலே சொன்னார்கள். சட்டப்படி உருவாக்கப் பட்டிருக்கின்ற அரசு என்றாலும், அரசியல் அடிப்படை தகுதிக்கு முரணாக, சட்டமன்றத்திலேயே, அறிவியலுக்குப் புறம்பாக, அரசியலுக்குப் புறம்பாக, ** கேரள சட்டமன்றத்திலே தீர்மானம் இயற்றப்பட்டிருக்கிறது. ** இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், அவர்களுடைய அந்த உண்மைக்கு மாறான பரப்புரையின், வதந்தியின் காரணமாக இரு மாநிலங்களின் கோடிக்கணக்கான மக்களினுடைய அமைதி சீர்குலைந்திருக்கிறது. அவர்களுடைய சட்டம்–ஒழுங்கு சீர்கெட்டிருக்கிறது. அரசாங்கத்தினுடைய சொத்துகள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2011 டிசம்பர் 15] [திரு. உ. தனியரசு]

சூறையாடப்பட்டிருக்கின்றன. இந்த முல்லைப் பெரியாறு அணையை உடைப்பது என்று தீர்மானித்திருப்பதே அரசின் பொதுச் சொத்தை சேதப்படுத்துவதற்கு ** மிகப் பெரிய குற்றம்.

கூடங்குளம் அணுமின் நிலையத்தை, அது பாதுகாப்பாக இருக்கிறது என்று திரும்பத் திரும்பச் சொல்லி, அதை இயக்க முயற்சிக்கிறது மத்திய அரசு. அதற்காக மக்களைத் திரட்டிப் போராடுபவர்கள்மீது, வீண் வதந்தியைப் பரப்பி, உண்மைக்கு மாறாக பரப்புகிற செய்தியை, அமைதியைச் சீர்குலைப்பதாகச் சொல்லி, அவர்கள்மீது குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்க அச்சுறுத்துகிறது. ** அந்த உண்மைக்கு மாறான பரப்புரையைச் செய்து சட்டம்–ஒழுங்கைச் சீர்கெடுக்க நினைத்தால், அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்த அவர்கள் முயற்சித்தால், அவர்கள்மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தை அணுகி, அவர்களைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும். ஏனென்றால், பொது அமைதியைச் சீர்குலைத்தால், உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிக்கே தலை வணங்காதவர்கள் அவர்கள். நீதிக்குத் தலை வணங்காதவர்களைப் பொதுவாக நம்முடைய நாட்டிலே ** என்று சொல்வார்கள். அந்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினை ** அவர்கள் சட்டப்படி பாதுகாக்கப்பட வேண்டியவர்களா, சட்டப்படி அவர்கள் உயர்ந்தவர்களா, என்பதையெல்லாம் நாம் உணர்ந்து, சட்டத்திற்கு முரணாக, சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட அரசாக இருந்தாலும், சட்டத்திற்கு முரணாகச் செயல்படுவதனால், அந்த அரசின்மீது நடவடிக்கை எடுப்பதற்கும் எல்லாவகையான நடவடிக்கைகளையும் எடுத்து தமிழ்நாட்டின் ஆற்று நீர் உரிமையை, குறிப்பாக நம்முடைய முல்லைப் பெரியாறு அணையைப் பாதுகாத்து, கோடிக்கணக்கான தமிழர்களின் வாழ்வுரிமையை மீட்டெடுப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய கரம் பற்றி, ஏழு கோடி தமிழர்களும் வழிநடப்போம் எனச் சொல்லி தீர்மானத்தை ஆதரித்து நிறைவு செய்கிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2011 டிசம்பர் 15

*பிற்பகல் 1–00*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுத் தொன்மைமிக்க தமிழ்நாட்டின் உரிமையை மீட்டெடுப்பதற்காக, ஒட்டுமொத்த தமிழ் மக்களின் உணர்வுகளை, உரிமைக் குரலாக இன்றைக்கு நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முல்லைப் பெரியாறு அணையைப் பாதுகாக்க கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை நாங்கள் முழு மனதோடு வரவேற்கிறோம்.*

*எப்பொழுதெல்லாம் நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்கிறார்களோ, அப்பொழுதெல்லாம் தமிழக மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கிற வகையில், அவர்களுடைய இதுபோன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு என்பது முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும். கடந்த முறை நம்முடைய தமிழக முதலமைச்சராக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்த காலத்திலே, தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி, போராடி ஒரு உரிமையை உச்ச நீதிமன்றத்திலே பெற்றார்கள். அதுதான் 27–2–2006–லே உச்ச நீதிமன்றத்திலே நமக்குக் கிடைத்த தீர்ப்பு. அதற்குப் பிறகு, அதிலே ஒரு தொய்வு ஏற்பட்டுவிட்டது. அன்றைக்கு 152 அடி வரையிலேகூட உயர்த்தலாம் என்கிற அளவிற்கு அந்தத் தீர்ப்பு கிடைத்தது என்றால், அந்தத் தீர்ப்பே கடந்த முறை முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோது எடுத்த நடவடிக்கைகளுடைய விளைவு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 2006–க்குப் பிறகு அதிலே ஒரு தொய்வு ஏற்பட்டது.*

*116 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே கர்னல் பென்னிகுயிக் என்பவரால் கட்டப்பட்ட அந்த அணை, 45 ஆண்டுக் காலமாகவே “இடிந்து போகும், உடைந்து போகும்” என்ற பிரச்சாரத்திற்கு உட்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சாரம் இன்றைக்கு விளைந்தது அல்ல. ‘அந்த அணை உடைந்து போகும்; அந்த உடைப்பினால், இலட்சக்கணக்கான கேரள மக்களின் உயிர் போகும்’ என்கிற*



2011 டிசம்பர் 15] *[முனைவர் செ.கு. தமிழரசன்]*

*இந்தப் பிரச்சாரம், 45 ஆண்டுக் காலமாகவே தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிற பிரச்சாரம். இந்தப் பிரச்சாரமே எவ்வளவு வலுவற்றது; உண்மையற்றது; நியாயமற்றது; விஞ்ஞானப்பூர்வமற்றது என்பது தெளிவாகும். 45 ஆண்டுக் காலமாக இதையே கேரளாவிலே திட்டமிட்டுப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.*

*இந்தப் பிரச்சினையிலே இன்றைக்கு மிகப் பெரிய வருத்தம், வேதனை என்னவென்றால், முதலமைச்சர், சட்டமன்றம், எதிர்க்கட்சி, அனைத்து அரசியல்வாதிகள் என்று இணைந்து இந்தப் பிரச்சாரத்தை வலுவூட்டிச் செய்வதுதான். அந்தப் பிரச்சாரம் இன்றைக்குச் சமூக, தேசிய ஒருமைப்பாட்டிலே நம்பிக்கை உள்ளவர்களுக்கு, வேதனையை ஏற்படுத்துவதாக இருந்து கொண்டிருக்கிறது.*

*இடுக்கி அணை எழுப்பப்பட்டால், அதன் வழியாக புனல் மின்சாரத்தைத் தயாரிப்பதற்குக் கேரளாவிற்கு வாய்ப்பு கிடைக்கும். புனல் மின்சாரத்தைத் தயாரிப்பதற்கு இந்த முல்லைப் பெரியாறு அணை தகர்க்கப்பட்டால்தான், வசதியும், வாய்ப்பும் கிடைக்கும் என்கிற அந்த ஒரே எண்ணத்திற்காக, இன்றைக்கு ஒட்டுமொத்த கேரள அரசியல் அமைப்புகளும், அரசியல் இயந்திரமும் முடுக்கி விடப்பட்டு, இந்தப் பிரச்சாரத்திலே ஈடுபட்டிருக்கின்றன என்பதுதான் யதார்த்தமான உண்மை.*

*நமக்கு எங்கெல்லாம் பிரச்சினை பாருங்கள். காவிரியிலே கர்நாடகா பிரச்சினை; பாலாற்றிலே ஆந்திரா பிரச்சினை; முல்லைப் பெரியாற்றிலே கேரளா பிரச்சினை. ஆக, அண்டை மாநிலங்களான கேரளாவோடு, கர்நாடகத்தோடு, ஆந்திராவோடு இதுபோன்று நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. ஆக, இந்தப் பிரச்சினைகளால் இப்படித் தொடர்ந்து தமிழகம் வஞ்சிக்கப்படுகிற வகையிலே, புறக்கணிக்கப்படுகிற வகையிலே இருக்கிற சூழ்நிலையில், நான் ஒன்றை இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.*

*இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த மிகப் பெரிய அணு விஞ்ஞானி டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், இன்றைக்கு “நதிகள் தேசியமயமாக்கப்பட வேண்டும்” என்று சொல்லியிருக்கிறார். அரசியல் சட்டத்தை உருவாக்குகிறபோதே, அரசியல் சட்டச் சிற்பியாக விளங்கிய பேரறிஞர் அம்பேத்கர் அவர்கள், “நதிகள்*

தேசியமயமாக்கப்பட வேண்டும்" என்கிற இந்தக் கருத்தை அன்றைக்கே முன் வைத்தார்கள். அது எந்தக் காரணத்திற்காகவோ தடைப்பட்டு போனது; நீர்த்துப் போனது. இன்றைக்கு அதே கருத்தைத்தான், இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த அணு விஞ்ஞானி டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்தக் கருத்து இன்றைக்கு இந்திய அரசியலமைப்பில் திருத்தப்பட்டு, ஒரு சட்டமாக உருவாக்கப்பட வேண்டும் என்கிற ஒரு நிலைமை உருவாக வேண்டுமென்றால், நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால்தான் அது முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நதிகள் தேசியமயமாக்கப்பட வேண்டும்.

69 சதவிகித இட ஒதுக்கீடு சட்டத்திற்கு உயிர் தந்தவர், பாதுகாப்பு தந்தவர் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவர்களைப் போன்றவர்களால்தான் இதற்கொரு நிரந்தரத் தீர்வைக் காண முடியும். 10 நாட்களுக்கு முன்னால், நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த நாட்டினுடைய பிரதம அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினார். முல்லைப் பெரியாறு அணை குறித்த இப்படிப்பட்ட ஒரு பிரச்சாரத்தினால், அந்த அணையைப் பற்றிய ஒரு உண்மைக்கு மாறான தகவலால், தமிழக மக்களும், கேரள மக்களும் பதற்றத்திற்குள்ளாகி இருக்கிறார்கள்.

பிற்பகல் 1–05

ஆகவே, அந்த அணையைப் பாதுகாப்பதற்கு மத்திய தொழிற் பாதுகாப்புப் படையை அங்கு நிறுத்த வேண்டுமென்று 10 நாட்களுக்கு முன்னால் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசை வலியுறுத்தி பிரதமருக்குக் கடிதம் எழுதினார்கள். ஆனால், இதுவரையிலே அந்தக் கடிதம் குறித்து ஒரு பதிலோ, ஒரு கருத்தோ, பிரதமர் அவர்களிடத்திலிருந்தோ, வேறு மத்திய அமைச்சர்களிடமிருந்தோ, நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்தோ அல்லது வேறு எந்த அதிகாரிகளிடமிருந்தோ எந்தவிதமான ஒரு பதிலையும் இன்றுவரை பெற முடியவில்லை என்று சொன்னால்— ஆந்திராவிலே இருப்பது காங்கிரஸ் அரசு, கேரளாவிலே இருப்பது காங்கிரஸ் அரசு. ஆக, மத்திய அரசு, மாற்றான் தாய் மனப்பான்மையோடு நடந்துகொள்கிறதோ என்கிற சந்தேகம் தமிழ்நாட்டு மக்களுக்கு எழுகிறது. தமிழக மக்களுக்கு அப்படிப்பட்ட ஓர் உணர்வு இன்றைக்கு எழுகிறது. மத்திய அரசிடமிருந்து இதுவரை ஒரு பதிலும், ஒரு கருத்தும் இல்லை.





நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி ஒரு கடிதம் எழுதினார்கள். அதற்கும் இதுவரையில் ஒரு பதிலும் இல்லை. ஆக, கேரள காங்கிரஸ் அரசு, கேரளாவிலே இருக்கிற ஒட்டுமொத்த அந்த அரசு இயந்திரம் இன்றைக்கு ஒரு உண்மைக்கு மாறான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுக்கிற எந்த நடவடிக்கைக்கும் இங்கே இருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளும், அதைபோன்று இங்கே இருக்கிற அனைத்து அரசியல் இயக்கங்களும், ஒட்டுமொத்த 7 கோடி தமிழ் மக்களும், உலகத் தமிழ் மக்களும் புரட்சித் தலைவி அம்மாவினுடைய தலைமையிலே "ஒன்றுபட்டு நின்றோம், எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்" ஒன்றுபட்டு தமிழ் மக்கள் புரட்சித் தலைவி அம்மாவின் தலைமையில் நிற்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற அப்படிப்பட்ட ஒரு உணர்வை இன்றைக்கு நாம் உருவாக்கிட வேண்டும். முதலமைச்சர் அம்மா அவர்கள் எடுக்கிற இந்த நடவடிக்கையை ஒரு அனைத்துக் கட்சிக் குழுவின் வழியாக டெல்லி சென்று பிரதமரை சந்திப்பதாக இருந்தாலும், அவர்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்துகிறவகையிலே ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்து புலப்படுத்துவதாக இருந்தாலும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுக்கிற அனைத்து நடவடிக்கைகளையும் தமிழகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களும், ஒன்றுபட்ட தமிழ் மக்களும், உலகத் தமிழ் மக்களும் ஆதரிப்பார்கள், வரவேற்பார்கள், துணை நிற்பார்கள் என்கிற உணர்வோடு ஆதரவு தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள், கேரள மாநில முதல்வர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரை ** என சித்தரித்துக் கூறிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்து தெரிவித்திருக்கின்ற அனைத்து கருத்துகளோடும் இந்தத் தீர்மானத்தின் இன்றியமையாமையைக் கருதி பேரவையின் சார்பிலே என்னுடைய உணர்வுகளையும் இந்தத் தீர்மானத்தோடு இணைத்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துகளைத் தெரிவித்து இருக்கிறீர்கள். தமிழக மக்களின் ஜீவாதாரப் பிரச்சினையான முல்லைப் பெரியாறு அணை விஷயத்தில், அரசியலுக்கு அப்பாற்பட்டு நாம் அனைவரும் ஒற்றுமையாக இருப்பது இங்கே நிலைநிறுத்தப்பட்டு இருக்கிறது. இதற்காக, எனது மனமார்ந்த நன்றியை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரை உயர்த்திக்கொள்ளலாம் என்ற தீர்ப்பை 27–2–2006 அன்று உச்ச நீதிமன்றம் வழங்கியதிலிருந்து உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிடுவதையே கேரள அரசு குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்தத் தீர்ப்பு வெளிவந்தவுடன், அந்தத் தீர்ப்பினை முடக்கும் வகையில், கேரள அரசு ஒரு சட்டத்தினை இயற்றியது. இதனையடுத்து, முல்லைப் பெரியாறு பகுதியில் ரிக்டர் அளவுகோலில் 2.1 அளவுக்கு நிலநடுக்கம் ஏற்பட்டதாக பத்திரிகைகளில் 18–8–2006 அன்று செய்தி வெளியானது. இதனையடுத்து, 29–11–2006 அன்று மத்திய நீர்வளத் துறை அமைச்சர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில், புதிய அணை கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையை கேரள அரசு முன்வைத்தது. இவற்றின் உச்சகட்டமாக, தற்போது அணை உடைந்து, பல கிராமங்கள் நீரில் மூழ்கிவிடும் என்ற உண்மைக்கு மாறான பிரச்சாரத்தை கேரள அரசு பரப்பி வருகிறது. இந்தத் தருணத்தில், ஒருசிலவற்றை குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அணையின் பாதுகாப்பு குறித்து 1979 ஆம் ஆண்டு கேரளா ஐயப்பாட்டினை எழுப்பியபோது, அப்போதைய மத்திய நீர் ஆணையத்தின் தலைவர் டாக்டர் கே.சி. தாமஸ் அவர்கள் ஆய்வு நடத்தி, அணை மிகவும் பாதுகாப்பாக உள்ளது என்று தெரிவித்து, அணையை மேலும் வலுப்படுத்தும் வகையில், நவீன தரத்திற்கேற்ப சில மாறுதல்களை செய்ய வேண்டும் என்ற ஆலோசனையையும் தெரிவித்தார். அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வலுப்படுத்தும் பணிகளை, நான் என்னுடைய துவக்க உரையில் உங்களுக்குச் சுட்டிக்காட்டினேன். இதற்குப் பின்னர், புது அணைக்கு இணையாக முல்லைப் பெரியாறு அணை விளங்குகிறது. 27–11–2011 அன்று டாக்டர் கே.சி. தாமஸ்





தன்னுடைய பத்திரிகைச் செய்தியில், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 152 அடிக்கு உயர்த்தப்பட்டாலும், அதில் உள்ள 13 வடிகால்கள் அதிகபட்ச வெள்ளப்பெருக்கை கையாளும் திறன் கொண்டவை என்றும்; அணை உடைந்து இடுக்கி அணை மூழ்கிவிடும் என்று சொல்வது சாத்தியமற்றது என்றும் கூறியுள்ளார். இது மட்டுமல்லாமல், 1730 ஆம் ஆண்டு ராஜஸ்தான் மாநிலம், உதய்பூரில் கட்டப்பட்ட ஜெய்சமந்த் என்ற அணை இன்னமும், நல்ல நிலையில்தான் உள்ளது என்றும் சுட்டிக்காட்டி இருக்கிறார். எனவே, முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்ற வாதத்தை முற்றிலும் ஏற்றுக்கொள்ளவே முடியாது.

பிற்பகல் 1–10

இதேபோன்று, முல்லைப் பெரியாறு அணை நில நடுக்கம் நிகழக்கூடிய இடத்தில் அமைந்துள்ளது என்ற ஒரு வதந்தி அண்மைக்காலமாக, கேரள அரசினால் பரப்பப்பட்டு, அதன் காரணமாக, தேவையில்லாத குழப்பமும், பீதியும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதுவும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று அல்ல. முல்லைப் பெரியாறு அணை மண்டலம் 3–ல் அதாவது Seizmic Zone III–ல்தான் வருகிறது. இணைய தளத்திலிருந்து யார் வேண்டுமானாலும் எளிதில் இறக்கம் செய்யக்கூடிய, பூகம்பம் தொடர்பான, இந்திய வரைப்படத்தை பார்த்தே இதனை தெரிந்துகொள்ளலாம். மூன்றாவது மண்டலத்தில் ஏற்படக்கூடிய நில அசைவுகள், வெகு அரிதாகத்தான், நில நடுக்கத்தை அளக்கும் அளவையில் மூன்று புள்ளிகளைத் தாண்டுகிறது. 2 முதல் 2.9 வரையிலான நில அசைவுகள் நில நடுக்கத்தை அளக்கும் அளவுகோலில், அதாவது Richter Scale–ல் பதிவு செய்யப்படுகிறதே ஒழிய, அவை உணரப்படுவதில்லை. இதுபோன்ற நில அசைவுகள் உலகம் முழுவதும் ஒவ்வொரு நிமிடமும் ஏற்படுகின்றன. இவையெல்லாம், வானிலை ஆராய்ச்சித் துறை தெரிவிக்கும் புள்ளிவிவரங்கள், நில நடுக்கத்தை அளக்கும் அளவையில், Richter Scale–ல் பதிவாகும் 3 முதல் 3.9 வரையிலான நில அசைவுகள், "பெரும்பாலும் உணரப்படும்; ஆனால் சேதத்தை ஏற்படுத்தாது". இந்த நில அதிர்வுகள் அதிக தூரம் பரவினாலும் கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை. உண்மை நிலை இவ்வாறு இருக்கையில், நில நடுக்கத்தின் காரணமாக முல்லைப் பெரியாறு அணைக்கு சேதம் ஏற்படும் என்று எண்ணுவதற்கு எந்தவித அடிப்படை ஆதாரமும் கிடையாது.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 டிசம்பர் 15

கேரள முதலமைச்சர் அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில், கடந்த நான்கு மாதங்களில் 22 நில அதிர்வுகள் ஏற்பட்டதாகக் கூறி இருந்தார். இது முற்றிலும் * உண்மைக்கு மாறான தகவல் என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விழைகிறேன். இந்திய வானியல் ஆராய்ச்சித் துறையின் புள்ளிவிவரத்தின்படி, கடந்த நான்கு மாதங்களில் நான்கு நில அதிர்வுகள் மட்டுமே ஏற்பட்டுள்ளன. இந்த நில அதிர்வுகளும், முல்லைப் பெரியாறு அணைப் பகுதியிலிருந்து வெகு தூரத்தில் ஏற்பட்டுள்ளவை என்பதும்; இதன் காரணமாக, அணையிலிருந்து வெளியேறும் நீர்க்கசிவில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த உண்மை நிலையை, கடிதம்மூலம் கேரள முதலமைச்சருக்கு நான் சுட்டிக்காட்டி உள்ளேன்.

முல்லைப் பெரியாறு அணை, நில நடுக்கம் காரணமாக உடைந்து, அந்தப் பகுதி நீரில் மூழ்கிவிடும் என்ற கேரள தரப்பின் வாதத்திலும், எள்ளளவும் உண்மை இல்லை. ஏனெனில், இந்தப் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புகள் முல்லைப் பெரியாறு அணையில் வெள்ள நீர்மட்டத்தைவிட அதிகமான உயரத்தில்தான் அமைந்துள்ளன. கேரளாவின் இடுக்கி நீர்த்தேக்கம், வினாடிக்கு 4,00,000 கன அடி அளவு வெள்ளப் பெருக்கினை ஏற்றுக்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றம் தனது 27–2–2006 ஆம் தேதிய ஆணையில், “அதிக அளவில் மழை பெய்த போதிலும், இடுக்கி நீர்த்தேக்கம் அதன் முழுக் கொள்ளளவை எட்டவில்லை. அதன் முழுக் கொள்ளளவு 70.5 டி.எம்.சி. அடி ஆக இருந்த போதிலும்; அதில் இது வரை 57.365 டி.எம்.சி. அடி வரைதான் நீர் நிரம்பியுள்ளது. மிகவும் மோசமான நிலை ஏற்படும் என்று எடுத்துக்கொண்டாலும், இடுக்கி நீர்த்தேக்கம் 11 டி.எம்.சி. அடிக்கும் மேலான நீரை உள்வாங்கிக்கொள்ளும் என்பது தெரிய வருகிறது” என்று கருத்து தெரிவித்துள்ளது.

இது மட்டுமல்லாமல், கேரள உயர் நீதிமன்றம் முன்பு நடைபெற்ற ஒரு பொது நல வழக்கு விசாரணையில், முல்லைப் பெரியாறு அணைக்கு ஏதாவது நேரிட்டாலும், அந்த நீரினை இடுக்கி, குலமாவு மற்றும் செருதோணி அணைகள் பெற்றுக்கொள்ளும் என்று கேரள அரசின் தலைமை வழக்குரைஞர் கேரள உயர் நீதிமன்றத்தின் முன்பு தெரிவித்து இருக்கிறார்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க திருத்தப்பெற்றது.



2011 டிசம்பர் 15] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இதிலிருந்து, முல்லைப் பெரியாறு அணை உடைந்து, அப்பகுதிகள் நீரில் மூழ்கி, 35 இலட்சம் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற கேரள அரசின் வாதம் * உண்மைக்கு மாறானது என கேரள அரசினாலேயே நிரூபிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1–15

** என்பது unparliamentary word என்று சட்டப் பேரவை விதிகள்படி கூறப்படுகிறது. எனவே, இங்கே திருத்திக்கொள்கிறேன். 35 இலட்சம் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற கேரள அரசின் வாதம் உண்மைக்கு மாறானது என கேரள அரசினாலேயே நிரூபிக்கப்பட்டுள்ளது.

இடுக்கி நீர்த்தேக்கத்தின்மூலம், 780 மெகாவாட் புனல் மின்சாரம் தயாரிக்க கேரள அரசு திட்டமிட்டது. ஆனால், அதற்குத் தேவையான நீர் கிடைக்கப் பெறாத காரணத்தால், திட்டமிட்டபடி புனல் மின்சாரம் தயாரிக்க இயலவில்லை. முல்லைப் பெரியாறு அணை இல்லை என்றால், அந்த நீர் முழுவதும் இடுக்கி நீர்த்தேக்கத்தை சென்றடையும். அதன்மூலம், கூடுதலான புனல் மின்சாரம் தயாரிக்க இயலும் என்பதால்தான், முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்ற தவறான விஷமப் பிரச்சாரத்தை கேரள அரசு மேற்கொண்டுள்ளதோ என்ற ஐயப்பாடு தற்போது மேலோங்கி நிற்கிறது.

இதுமட்டுமல்லாமல், முல்லைப் பெரியாறு அணையிலிருந்து 50 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இடுக்கி நீர்த்தேக்கத்திற்கு உபரி நீர் செல்லும்போது, அதன் வேகம் சுமாராக வினாடிக்கு 3 அடி வீதம்தான் இருக்கும். முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 136 அடியாக இருக்கும்போது, அதன் நீர்ப்பரப்பு 4,678 ஏக்கராகும். 155 அடி வரை நீர் தேக்கப்பட்டால், அதன் நீர்ப்பரப்பு 8,591 ஏக்கராகும். நீண்டகாலமாக அணையில் 136 அடிக்கு மேல் நீர் தேக்கப்படாததால், அந்த நீர்ப்பரப்புப் பகுதிகள் கேரளாவைச் சேர்ந்த நில அபகரிப்பாளர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, தமிழ்நாட்டிற்கு குத்தகைக்கு விடப்பட்ட பகுதிகளில் விடுதிகள் மற்றும் பிற கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன என்று சொல்லப்படுகிறது. எனவே, முல்லைப் பெரியாறு அணையை செயலிழக்கச் செய்ய வேண்டும் என்று கூறுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கும் என ஒருசிலர் கருதுகின்றனர்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க திருத்தப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 டிசம்பர் 15

உச்ச நீதிமன்றத்தில் தற்போது நடைபெற்று வரும் வழக்கில், 22–7–2008 அன்று சுற்றுச்சூழல் ஆய்வாளர், திரு. த்ருபஜோதி கோஷ் அவர்கள் தயாரித்த அறிக்கையை, கேரள அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இந்த அறிக்கையில், 1979 ஆம் ஆண்டு முதல் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம், தற்காலிகமாக 136 அடியளவிற்கு குறைக்கப்பட்டதன் காரணமாக, நீர்ப்பரப்பு குறைந்துவிட்டது என்றும்; 136 அடி முதல் 152 அடி வரை உள்ள நீர்ப்பரப்புப் பகுதியில், 21 ஆண்டுகளாக வீடுகள், பேருந்து நிலையம் ஆகியவை கட்டப்பட்டதாகவும், விவசாயம், Eco Development போன்ற நடவடிக்கைகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், தமிழக அரசுக்கு குத்தகைக்கு விடப்பட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில், பல்வேறு வகையான ஆக்கிரமிப்புகள் உள்ளன என்பதை கேரள அரசே ஏற்றுக்கொண்டுள்ளது என்பது தெள்ளத் தெளிவாகிறது.

முல்லைப் பெரியாறு அணை வாயிலாக, தற்போது தமிழகம் பெற்றுவரும் தண்ணீரை, தான் கட்டவுள்ள புதிய அணையின் வாயிலாக தரும் என்ற கூற்றை, அண்மைக் காலமாக கேரள அரசு தெரிவித்து வருகிறது. இந்தக் கூற்றில் எள்ளளவும் உண்மை இல்லை என்பதையும், இது ஒரு ஏமாற்று வேலை என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூற விழைகிறேன். உண்மை நிலை என்னவென்றால், உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட அதிகாரம் படைத்த குழுவிற்கு, அதாவது Empowered Committee–க்கு சமர்ப்பித்துள்ள விரிவான திட்ட அறிக்கையில், புதிய அணையின் முழு நீர்மட்ட அளவு 136 அடி என்றும், அணையிலிருந்து சுற்றுப்புறச்சூழல் பயன்பாட்டிற்காக 1.1 டி.எம்.சி. அடி நீரை வெளியேற்றும் வகையில் மதகு அமைக்கப்படும் என்றும் கேரள அரசு தெரிவித்துள்ளது. இதிலிருந்தே, முல்லைப் பெரியாறு அணையிலிருந்து தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் குறைக்கப்பட்டுவிடும் என்பது தெளிவாகிறது. எனவே, முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்ற வாதம் தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரைத் தராமல் இருப்பதற்கான ஒரு நடவடிக்கையே தவிர வேறு ஒன்றும் இல்லை.

எனவே, முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்பதை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. கேரள மக்களிடையே ஒருவித அச்ச உணர்வு மற்றும் பீதி ஏற்படுத்தப்பட்டு வருவது துரதிருஷ்டவசமானது. முல்லைப்



2011 டிசம்பர் 15] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பெரியாறு அணை புது அணையைப் போன்று முழுவதும் பாதுகாப்பாக உள்ளதால், தன்னல அக்கறை கொண்டோரின் சதிச் செயலைப் புரிந்துகொண்டு, முல்லைப் பெரியாறு அணை புது அணையைப் போல் மிகவும் பாதுகாப்பாக உள்ளது என்பதையும், எனவே அது இந்தப் பகுதியில் உள்ள மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் அச்சுறுத்தலாக எள்ளளவும் இல்லை என்பதையும் கேரள மக்கள் உணர வேண்டும்.

இரு மாநிலங்களின் நீண்ட கால உறவு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் தமிழக அரசு உறுதியாக உள்ளது. எனவே, இரு மாநிலங்களின் நலனைக் கருதி, எந்த ஒரு பிரிவினை சக்திகளுக்கும் இடம் தராமல் இருக்க வேண்டும் என தமிழ்நாடு மற்றும் கேரள மக்களை நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

முல்லைப் பெரியாறு பிரச்சினையைப் பொறுத்தவரையில், உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் வகையில், தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞான ரீதியான புள்ளிவிவரங்களையும்; தமிழகத்தின் பக்கம் உள்ள நியாயத்தையும் எடுத்துரைத்து, அதன்மூலம், நமது உரிமையை நிலைநாட்ட முடியும் என தமிழக அரசு உறுதியாக நம்புகிறது. எனவே, இந்தப் பிரச்சினையை விஞ்ஞான ரீதியாகவும், தர்க்கப்பூர்வமான முறையிலும் கையாள இந்த அரசுக்கு நீங்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன். கேரள எல்லைக்குச் செல்ல முற்படுவது, மாநில எல்லையில் போராட்டங்களை மேற்கொள்வது போன்றவை நமது வலுவான வாதங்களுக்கு எதிராக அமைந்துவிடும் என்பதையும்; நமக்கே இது பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்பதையும் உணர்ந்து; இதுபோன்ற போராட்டங்களைத் தவிர்க்க வேண்டும் என்றும் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

முல்லைப் பெரியாறு பிரச்சினையில், தமிழகம் மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்களுக்கிடையே 1886 மற்றும் 1970–ல் ஏற்பட்ட ஒப்பந்தங்களுக்கு மதிப்பளித்து நடக்கவும்; உச்ச நீதிமன்றத்தின் 27–2–2006 தீர்ப்பை மதித்து, 2006 ஆம் ஆண்டு கேரள நீர்ப்பாசன திருத்தச் சட்டத்தை திரும்பப் பெறவும்; இதுகுறித்த வழக்கு உச்ச நீதிமன்றத்தின் முன்பும்; உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட அதிகாரம் படைத்த குழுவின் முன்பும் நிலுவையில் இருக்கும்போது, அரசியல் ஆதாயத்திற்காக, அணை உடைந்துவிடும்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 டிசம்பர் 15

என்ற பீதியை கேரள மக்களிடையே கிளப்பிவிட்டு, அதன்மூலம் புதிய அணைப் பிரச்சினையை எழுப்ப வேண்டாம் என்றும்; கேரள அரசை அறிவுறுத்துமாறு 23–11–2011 நாளிட்ட எனது கடிதத்தின்மூலம் பாரதப் பிரதமர் அவர்களைக் கேட்டிருந்தேன். கடிதம் எழுதி 20 நாட்களுக்கு மேலாகியும், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் மத்திய அரசு மவுனம் சாதிப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது.

இதேபோன்று, முல்லைப் பெரியாறு பகுதியில் நிலவும் பதற்றமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, மத்திய தொழிற் பாதுகாப்புப் படையினரை அனுப்ப வேண்டும் என்று நான் பாரதப் பிரதமரைக் கேட்டிருந்தேன். அதற்கும் தன்னுடைய மவுனத்தையே பதிலாக அளித்துள்ளார் பாரதப் பிரதமர். முல்லைப் பெரியாறு பகுதிக்கு உடனடியாக மத்திய தொழிற் பாதுகாப்புப் படையினரை அனுப்பி வைக்குமாறு பாரதப் பிரதமரை இந்த அவையின் வாயிலாக மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

முல்லைப் பெரியாறு பிரச்சினையில், கேரள அரசின் நடவடிக்கைகளைக் கண்டிக்கும் வகையிலும்; பதற்றமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மத்திய தொழிற் பாதுகாப்புப் படைகளை அனுப்ப வலியுறுத்தியும்; தமிழகத்திற்கு உள்ள உரிமையை நிலைநாட்டும் வகையிலுமான தீர்மானத்தை இந்த மாமன்றத்தின் முன்பு வைத்துள்ளோம். தமிழ்நாடு அரசின் சார்பில் என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தினை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு இந்த மாமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின்முன்பு வைக்கப்பட்ட, என்னால் முன்மொழியப்பட்ட தீர்மானத்தில்கூட தவறுதலாக ** என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதைத் திருத்தி, 'உண்மைக்கு மாறான' என்று மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானத்தில் இரு இடங்களில் இடம்பெறும் ** என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக, 'உண்மைக்கு மாறான பிரச்சாரம்' என்ற வார்த்தைகள் இடம்பெற வேண்டும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2011 டிசம்பர் 15] [பேரவைத் தலைவர்]

என்ற திருத்தத்தை உள்ளடக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, திருத்தப்பெற்றவாறு தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. அரசினர் தீர்மானங்கள்– தொடர்ச்சி

## (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)–ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்."

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–24 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

————

[2011 டிசம்பர் 15

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை இருப்புப் பாதை வழியாக உத்தரப்பிரதேசத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு கொண்டு வந்து சேர்க்கும் பணியை கண்டெய்னர் கார்ப்பரேஷன் ஆஃப் இண்டியா லிமிடெட் நிறுவனத்திடம் ஒப்படைத்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 7.1.2011 ஆம் நாளிட்ட 12 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் திறமையை பயிற்றுவிக்கும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் திட்டத்தை நடைமுறைப்படுத்த கான்ஃபிடரேஷன் ஆஃப் இந்தியன் இண்டஸ்டிரி–ஐ மாநில கலந்தறிதற்குரியவராக நியமித்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 15.2.2011 ஆம் நாளிட்ட 47 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்ட பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்யும் பணியை டெல்லி மெட்ரோ இரயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடம் ஒப்படைத்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 24.2.2011 ஆம் நாளிட்ட 55 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. தமிழக அரசின் சேவைகளை மாநில இணையதளம் மற்றும் மாநில சேவை விநியோக நுழைவாயில் வழியாக தமிழக மக்களுக்கு வழங்குவதற்கான செயல்பாட்டு முகமையாக திருவாளர்கள் விப்ரோ லிமிடெட் நிறுவனத்தை நியமித்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 24.2.2011 ஆம் நாளிட்ட 56 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



2011 டிசம்பர் 15]

5. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தல், 2011–ஐ நடத்துவதற்காக வாக்குப்பதிவு மையங்களுக்கு அகண்ட அலைவரிசை இணைப்பு கொடுப்பது, முதன்மைத் தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரி மற்றும் இதர தேர்தல் அதிகாரிகளுக்கிடையே வாடகைக்கு இணையதள இணைப்பினை வழங்குவது, கைபேசிகளுக்கான வாடிக்கையாளர் அட்டைகள் வாங்குவது மற்றும் இந்திய தேர்தல் ஆணையத்தின் கட்டளைப்படி ஏற்பாடு செய்து தரப்பட வேண்டிய இதுபோன்ற இதர சேவைகளை திருவாளர்கள் பாரத் சஞ்சார் நிகம் லிமிடெட் நிறுவனத்திடம் ஒப்படைத்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 28.3.2011 ஆம் நாளிட்ட 97 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. நெசவு சாயப்பட்டறைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளை கடலில் கொண்டு கலக்கும் திட்டத்தினால் சுற்றுப்புற சூழல்களில் ஏற்படும் தாக்கத்தினை மதிப்பீடு செய்யும் ஆய்வினை மேற்கொள்ள தேசிய பெருங்கடல்சார் நிறுவனத்தையும் மற்றும் தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்தையும் நியமித்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 19.5.2011 ஆம் நாளிட்ட 142 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள திருமண உதவித் திட்டங்களின் பயனாளிகளுக்கு திருமாங்கல்யம் செய்வதற்கான 4 கிராம் 22 கேரட் தங்கம் இலவசமாக வழங்குவதற்கு சமூகநலத் துறை இயக்குநரால் பொதுத் துறை வங்கிகள், பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அதன் அஸோஸியேட் வங்கிகளிலிருந்து தேவையான தங்கத்தை வாங்குவதற்கு வகை செய்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 12.7.2011 ஆம் நாளிட்ட 190 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. விரிவான பொது மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அமல்படுத்தப்படும் வரையில், செய்யப்பட்டுள்ள இடைக்கால

*ஏற்பாட்டுக்குத் தேவையான மென்பொருள் தீர்வுகள் வழங்க மற்றும் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பயிற்சிபெற்ற நபர்களை அவுட்சோர்ஸிங் மூலமாக வழங்கும் பணியை திருவாளர்கள் ஹெல்த் ஸ்பிரிண்ட் நெட்வொர்க்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடம் ஒப்படைத்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 29.7.2011 ஆம் நாளிட்ட 207 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*9. சென்னை மோனோ இரயில் திட்டத்தின் சாத்தியக்கூறு ஆய்வறிவிக்கை தயாரிக்கும் பணியில் பல்லவன் போக்குவரத்து ஆலோசனை சேவைகள் நிறுவனத்தினை ஈடுபடுத்துவது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 12.8.2011 ஆம் நாளிட்ட 216 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*10. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சலில் மீன்பிடி துறைமுகம் கட்டுவதற்கான குளச்சல் மீன்பிடி துறைமுகத்தின் ஆரவாரமற்ற அலை ஆராய்வினை மேற்கொள்ளும் பணியை பூனேயைச் சேர்ந்த மத்திய நீர் மற்றும் சக்தி ஆராய்ச்சி நிலையத்திடம் ஒப்படைத்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 25.8.2011 ஆம் நாளிட்ட 227 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*11. கோயம்புத்தூர் விளாங்குறிச்சியில் 'எல்காட்' நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, கோயம்புத்தூர் தகவல் தொழில்நுட்பப் பூங்கா நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள முதன்மை ஒப்பந்ததாரரால் அல்லது துணை ஒப்பந்ததாரரால் தொழில்நுட்பப் பூங்காவிற்காக பயன்படுத்துவதற்கான யாதொரு பொருட்களின் விற்பனைமீது யாதொரு வணிகரால் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிகவரி மற்றும் பதிவு (பி2)த் துறையின் 1.3.2011 ஆம் நாளிட்ட 47 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*





*12. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீட்டு நிதிகள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிகவரி மற்றும் பதிவுத் துறையின் 19.9.2011 ஆம் நாளிட்ட 117 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 40/1982) 89(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*1. 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2011.)*

*2. 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2011.)*

* * * * *